# சேலம் தாலந்தீர்த்த செழியன் மஞ்சரி

பதிப்பாசிரியர் :

*மு. சண்முகம் பிள்ளை*

தமிழ் விரிவுரையாளர்

திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி

சென்னைப் பல்கலைக்கழகம்.

[தமிழ்த்துறை வெளியிடும் 'தமிழாய்வு'
ஏழாம் தொகுதியிலிருந்து எடுத்து வெளியிடப்பட்டது]

*சென்னைப் பல்கலைக் கழகம்*

*1978*

அச்சில் வாரா அருந்தமிழ்—7

# சேலம் தாலந்தீர்த்த செழியன் மஞ்சரி

பதிப்பாசிரியர் :
மு. சண்முகம் பிள்ளை
தமிழ் விரிவுரையாளர்,
திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி,
சென்னைப் பல்கலைக் கழகம்.

சென்னைப் பல்கலைக் கழகம்

1978

முதற் பதிப்பு : ஏப்ரல், 1978.

**இதுவரை வெளிவந்த அருந்தமிழ் நூல்கள் :**

1. *அப்பாண்டைநாதர் உலா*
   — தமிழாய்வு I, 1972.
2. *நாககுமார காவியம்*
   — தமிழாய்வு II, 1973.
3. *திருமேற்றிசை அந்தாதி*
   — அப்பாண்டைநாதர் உலாவின் தனி வெளியீட்டுப் பிற்சேர்க்கை 1974.
4. *ஈனமுத்துப் பாண்டியன் கதை*
   — தமிழாய்வு III, 1974.
5. *அடிமதிக்குடி அய்யனார் பிள்ளைத்தமிழ்*
   — தமிழாய்வு IV, 1975.
6. *மெய்ம்மொழிச் சரிதை*
   — தமிழாய்வு VI, 1977.

# முகவுரை

## தோற்றுவாய்

பிரபந்த வகைகளுள் மஞ்சரி என்பது ஒரு வளர் நிலைப் பிரபந்தம் ஆகும். அகப்பொருள் அமைதியில் காதலை முக்கிய கருப்பொருளாகக் கொண்டு பாட்டுடைத் தலைவனின் சிறப்புக் களையும் ஏற்றவண்ணம் அமைத்துத் தருகிறது. இதன் முழு உருவமும் போக்கும் பிரபந்த இலக்கணம் கூறும் எந்த நூலிலும் தெளிவாக இல்லை. இவ்வகையில் அமைந்த இலக்கியம் எதுவும் இதுவரை அச்சேறியிருப்பதாகவும் தெரியவில்லை. எனவே, குகையூர்த் தமிழ்ப் புலவர் திரு. அடிகளாசிரியர் அவர்கள் சேலம் தாலந்தீர்த்த செழியன்மீதும் அவன் கால்வழியினர்மீதும் பாடப் பெற்ற சில பிரபந்தங்கள் அடங்கிய ஏட்டுச் சுவடியை என் பார்வைக்குத் தந்தபோது இந்த மஞ்சரி நூலை முதன்மையாய்த் தேர்ந்தெடுத்தேன்.

## 'மஞ்சரி' என்னும் சொற்பொருள்

'மஞ்சரி' என்பதற்குப் பூங்கொத்து, பூமாலை, தளிர், மலர்க்காம்பு, ஒழுக்கம், மஞ்சரிப்பா என்னும் ஆறு பொருள்களைச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி தருகிறது. பூங் கொத்துப் போல, பூமாலை போலப் பல்வேறு வகையான பாடல் தொகுப்பு களுக்கு 'மஞ்சரி' எனப் பெயர் சூட்டியுள்ளனர். தனிப்பா மஞ்சரி, காமரச மஞ்சரி முதலியன இவ்வகையின. யானையின் போர்த் தொழில் பலவற்றையும் விவரித்துப் பாடும் ஒரு பிரபந்தத்திற்கு 'ஆதோரண மஞ்சரி' எனப் பெயரிட்டுள்ளனர்.[1] பற்பல பொருள்கள் பற்றி வெளிவரும் சிறந்த கட்டுரைகள், கதைகள் முதலியவற்றைத் தொகுத்துக் 'கலைமகள்' அலுவலகம் வெளிட்டுவரும் திங்கள் இதழ் 'மஞ்சரி' என்னும் பெயருடையதாதலைப் பலரும் அறிவர். இங் கெல்லாம் பலவற்றையும் ஒருங்குதிரட்டிய திரட்டுநூல் என்னும் கருத்திலேயே 'மஞ்சரி' என்னும் பெயர் வழங்கப்படுதல் காணலாம்.

---

1. இதனை 'வாதோரண மஞ்சரி' என்றும் சிலர் சுட்டியுள்ளனர். இதற்கு இலக்கணம் வகுத்துரைக்கும் முத்து வீரியம், பிரபந்த தீபிகைப் பாடற் பகுதிகளைச் சந்தி முறையில் தவறாக வாசித்து இப் பெயரைக் கண்டனர் என்று தோன்றுகிறது.

## மஞ்சரிப் பிரபந்தம்

காதலே முதன்மைப் பொருளாகவைத்து ஒரு தலைவனின் புகழ் பேசுகின்ற முறையில் அமைந்துள்ளது இங்குப் பதிப்பிடப் பெறும் 'மஞ்சரி' என்னும் பிரபந்தம். இந்த இலக்கியவகை மேற்கூறிய திரட்டு நிலையிலிருந்தும் வேறுபட்டது. தலைவன்மேல் காதல் கொண்ட தலைவி ஒருத்தி, தலைவனுடைய மார்பில் விளங்கும் பூமாலையை இரந்து பெற்று, அவனையே நாயகனாக அடைந்து இன்பம் துய்த்து வாழ்வதனை விவரிக்கிறது. இதனை,

'தேமாலை யந்தாலந் தீர்த்தசெழி யன்மீதில்
மாமாலை யேபுகழும் மஞ்சரிக்கு'

எனவரும் இந்நூலின் காப்புச் செய்யுளின் தொடக்கமே விளக்கி நிற்றல் காணலாம். இந்நூலின் தலைவனாகிய தாலந்தீர்த்த செழியன் மீது அணிந்துள்ள அழகிய மாலையைப் புகழ்வது 'மஞ்சரி' என்பது இங்குக் குறிக்கப்படுகிறது. எனவே, பூமாலையாகிய மஞ்சரியை முதன்மையாய்க் கொண்ட இப் பிரபந்தமும் 'மஞ்சரி' எனப் பெயர் பெறுகிறது என்பது தெரியவரும்.

இந்தப் பிரபந்தத் தலைவியாகிய அதிரூபவல்லி, வீதியில் யானையின்மேல் உலாவந்த தாலந்தீர்த்த செழியன் எதிரே சென்று, அவனைப் புகழ்ந்து அவனிடம் தனக்குள்ள ஆராக்காதலை வெளிப்படுத்திப் பேசுமிடத்து,

'மாலையென தின்னுயிரை வாங்காமல் உன்குவளை
மாலைதனை யின்று வழங்குவாய்' (357)

என்று அவன் மார்பில் அணிந்துள்ள குவளைமாலையைக் கேட்கிறாள். பின்னர்த் தன் பாங்கியை அம் மன்னனிடம் தூதாகவிடுத்து, அவனுடைய மாலையை அப் பாங்கியின் வாயிலாகப் பெற்று மகிழ்கிறாள்.

'...........அரசே!கேள் — வாங்குமிடை
யெங்கொடிநிற் பாடு மெழில்விறலி தஞ்சமெனத்
தங்குமயல் கொண்டு தளர்காலைத் — துங்கமுடை
யுன்பவனி கண்டா ளுனதருள்பெற் றுளினிநீ
மன்புதிய தாரளித்து மன்னனே — அன்பொடுபின்
வாவென்று சொல்ல மருங்குவளைத் தாரளித்துப்
போவென் றனுப்புதலும் ..' (377—380)

எனவரும் பாடற்பகுதியால் பாங்கி சொன்னபடி தன் குவளை மாலையைத் தலைவிக்குத் தருமாறு செழியன் வழங்கி வழியனுப்புகிறான்.

மாலை பெற்ற வல்லியோ தான் விரும்பிய தலைவனை அடைந்ததாகப் பெருமகிழ்ச்சி கொள்ளுகிறாள்.

'செங்கைதனில் வைப்பத் திகழவ் வலங்கறனே
யெங்கணவ ஞகு மிதுவென்று — கொங்கைமிசை
யொற்றினுள் முத்த முதவினுள் கூந்தலிடைச்
சுற்றினுள் வைத்துத் துதித்துப்போய் — நற்றலைவன்
வந்தா னவனென்று வழிநோக்கி நிற்பளவில்' (381—383)

என்று அதிருபவல்லியின் அன்புக் காதல் நிலையைக் கவிஞர் காட்டுகிருர்.

இந்த நிலையில் செழியன் அவள் இல்லத்திற்கு வருகிருன். அவனை அவள் வரவேற்று, மஞ்சத்தில் அமரச் செய்து உபசரித்து மகிழ்கிருள்; அவனுடன் கூடிக் குலாவி அவள் இன்பம் துய்த்து வாழ்கிருள். இவ்வாருக இப் பிரபந்தப் பொருள் முடிவு அமைகிறது. தான் விரும்பும் தலைவனின் மாலையைப் பெற்று, அவனைக் கூடிய தன்மையினுல் 'மஞ்சரி' என்று மாலையையே முதன்மையாக வைத்து இப் பிரபந்தத்திற்குக் கவிஞர் பெயர் சூட்டியுள்ளார் என்பது விளக்கமாகும்.

## மஞ்சரி ஒரு பிரபந்தக்கொத்து

மஞ்சரி என்பது பூங்கொத்துக்கும் பெயராதல் போல இந்த மஞ்சரிப் பிரபந்தமும் அகப்பொருள் புறப்பொருள் பற்றிய சில பிரபந்தங்களின் கூட்டமைப்பாயும் உள்ளது. கேசாதிபாதம், விறலியாற்றுப்படை, தசாங்கம், காதல், குறம், உலா, தூது என்னும் பிரபந்தங்களின் அமைப்புகள் முறையே இதில் இடம் பெற்றுள் ளமை காணலாகும். இதில் வரும் விறலியாற்றுப்படை, தசாங்கம், உலா முதலியனவும் காதல் வளர்ச்சிக்குத் துணையாய் நிற்கின்ற வகையில் உள்ளமையால் மஞ்சரியில் விஞ்சி நிற்பது காதற் சுவை நிகழ்ச்சிகளே என்பது கருதற்பாலது.

அதிருபவல்லியின் உருவ அழகினை முதல் 21 கண்ணிகளில் பேசிய கவிஞர், தொடர்ந்து 21 முதல் 82 வரை 61 கண்ணிகளில் கேசாதிபாதமாக அவளை வருணிக்கின்ருர். எனவே, இம் மஞ்சரி யின் முதல் 82 கண்ணிகளைக் 'கேசாதிபாதம்' என்னும் பிரபந்தம் என்றும் கூறிவிடலாம்.

இதனையடுத்துப் பெருங் காப்பியங்களில் இடம் பெறும் புனலாடல், கோலம் புனைதல் போல இதிலும் அதிருபவல்லி பாங்கி யருடன்கூடி நீராடி மகிழ்தலும், பின்னர்ப் பாங்கிமார் அவளுக்குக் கோலம் புனைதலும் பற்றிக் கவிஞர் உரைக்கின்ருர் (83—103). காலையில் ஆடவரும் மகளிரும் நீராடிக் கோலம் பூணுகின்றனர் என்பதனைப் பின்னரும் அதிருபவல்லி (273-274), தாலந்தீர்த்த செழியன் (282-294) என்பார் இருவருடைய காலை நிகழ்ச்சிகளைக் குறிக்குமிடத்தும் சுட்டிக் காட்டியுள்ளார்.

சங்கப் பாடல்களில் ஆடல் பாடல்கள் நிகழ்த்துவோராகக் குறிப்பிடப் பெறும் விறலியைத் தோற்றுவித்து, அவள் வாயிலாக வீணையிசையும் புகழ்ப் பாடலுமாக இப் பிரபந்தத்தில் இசைக்கலை யின் மேன்மையும் கவிஞர் பேசியுள்ளார். மன்னர், வள்ளல் முதலியோரைப் புகழ்ந்து பாடி விறலி பரிசு பெறும் இயல்பினள் என்பது அவள் கழுத்தில் அணிந்துள்ள முத்துவடம் தாலந்தீர்த்த செழியன்பால் பெற்றது என்பதனுல் உணர்த்தப்படுகிறது.

அதிரூபவல்லி தன்னிடத்திற்கு வந்த விறலியை நோக்கி, 'உன் கழுத்தில் அணிந்துள்ள முத்துவடம் யார் தந்தது?' என்று கேட்க, அதற்கு விடையிறுக்கு முகத்தால், விறலியின் வாய்மொழியாக அந்தாலந் தீர்த்த செழியனின் குடிவழி, வெற்றிச் சிறப்பு, கொடைச் சிறப்புகளைக் கவிஞர் அறிமுகப்படுத்துகிருர்.

தாலந் தீர்த்தானின் புகழ் பேச வரும் விறலி முதலில் அவனுக் குரிய தசாங்கங்களையும் (மலை, ஆறு, நாடு, நகர், மாலை, குதிரை, யானை, கொடி, முரசு, ஆணை) சிறப்பித்துப் பேசுகிருள். இந்தப் பகுதியைத் (136—157) 'தசாங்கம்' என்னும் பிரபந்தமாகக் கொள்ளலாம்.

அடுத்துச் செழியனின் இராச பாரம்பரியம் கூறும் வகையில் குலமுறை கிளத்தியுள்ளார் (158-179)[1]. தாலந் தீர்த்த செழியனின் தெய்வத் திருப்பணி முதலில் குறிக்கப்படுகிறது (179-188). அவன் மறைவாணர்க்கும், கவிஞர்களுக்கும் அளிக்கும் கொடைச் சிறப்பும் தொடர்ந்து பேசப்படுகிறது (188-194). பின்னர், அவனுடைய வெற்றிச் சிறப்புகளை விவரிக்கிருர் கவிஞர் (194-219). செழியன் தனக்குப் பரிசாகத் தந்த முத்து மாலையையும் விறலி சிறப்பித்துப் பேசுகிருள் (219-227). தாலந் தீர்த்த செழியனின் புகழ் பேசிய அந்த விறலிக்குப் பரிசு தந்து அனுப்புகிருள் அதிரூபவல்லி (227-230).

இந்த இடத்தில்தான் காதல் தொடங்குகிறது. தலைவனை அதிரூபவல்லி நேரில் கண்டு கொண்ட காதல் அன்று இது; அந்தாலந்தீர்த்த செழியனின் சிறப்புகளை விறலி வாயிலாகக் கேட்டு, அவள் அவன்மேல் ஆராத பெருங்காதல் கொள்கிருள்[2] (230-231). மாலைப்பொழுதிலும் இரவிலும் விரகதாபத்தால் அவள் உற்ற துயரங்களும், இரங்கல் உரைகளும் அடுத்துக் காண்கிறோம் (232-268).

---

1. இப் பகுதி கலிங்கத்துப் பரணியில் வரும் 'இராச பாரம் பரியம்' என்பதனையும், கம்பராமாயணத்தில் வரும் 'குலமுறை கிளத்து படலத்'தையும் நினைவூட்டும்.

2. நள-தமயந்தியர் அன்னத்தின் உரை கேட்டுக் காதல் கொண்ட செய்தி இங்கு நினைவுக்கூரத்தக்கது.

காலைக் கதிரவன் தோன்றுகிறான் (268–272). பொழுது வருணனை அதாவது கதிரவனின் தோற்றமும், மறைவும், மாலைப்பொழுதின் மயக்கமும் இப்பகுதியிலும் முன்னர்க் குறித்த பகுதியிலும் இடம் பெறக் காணலாம். இவ்வாறு பொழுது வருணனைகளும் பெருங் காப்பியங்களிற்போல மஞ்சரியில் சிறிதளவு இடம் பெற்றுக் கவிதைச் சிறப்பைக் கட்டுரைக்கின்றன.

காலையில் சேடியர் அவளை நீராட்டி, அவளுக்குக் கோலம் புனைகின்றனர் (272–274). அச்சமயத்தில் குறிசொல்லும் குறத்தி வருகிறாள். அக்குறத்தியை அழைத்துச் சேடியர் தலைவி அதிரூப வல்லிக்கு நேர்ந்துள்ள துன்ப விளைவு பற்றி வினவுகின்றனர் (274-276). குறத்தி குறி சொல்லுகிறாள். 'இது முத்துவடத்தால் வத்தது. உன் மனத்தில் குடிகொண்டுள்ள தலைவன் பவனி வருவான். அவனுடைய மார்பின் மாலையைத் தோழி பெற்றுத்தரத் துயரம் தீர்வாய்' என்கிறாள் (276–279). இங்கே குறத்தி குறி இடம் பெறுகிறது; 'குறம்' என்னும் பிரபந்தப் பொருள் இங்கு அமைகிறது.

இதன் பின்னர்ச் செழியனின் பவனி பற்றி (279–374) 96 கண்ணிகள் பாடுகின்றார். இந்தப் பகுதி உலா இலக்கியப் பாங்கில் உள்ளது. தாலந்தீர்த்த செழியன் நீராடிக் கோலம் புனைந்து தெய்வத்தை வழிபட்டு, அரச பரிவாரங்கள் சூழ, யானைமேல் ஏறி, அவன் வீதியில் உலாவருகிறான். மகளிர், வீதியிலும் வீதியை அடுத்த மண்டபங்களிலும் இருந்து, அவனுடைய உலாவைக் கண்டு களிக்கின்றனர். பவனி கண்ட மாதர் பலரும் அவன்மேல் காதல் கொண்டவராய்ப் பலப்பல பேசுகின்றனர். இதன்பின் பேதை, பெதும்பை முதலிய எழு பருவ மகளிரும் காதல் கொண்ட தாக உலாப் பிரபந்தம் விவரித்துப் பாடும். பவனி கண்டு மாதர் பலரும் காதல் கொண்டனர் என்பது வரையுள்ள செய்திகள் உலா வின் முற்பகுதியாகும்.

இப்பொழுதுதான் குறத்தியிடம் குறிகேட்ட அதிரூபவல்லியை மீண்டும் கவிஞர் நமக்கு அறிமுகப் படுத்துகிறார். அவள் செழியன் எதிரே சென்று, அவனைப் புகழ்ந்து, அவனுடைய மார்பு மாலையை வேண்டுகிறாள். செழியன் அவள்மேல் கண்சார்த்தி அருள் செய்கிறான் (348–374). இந்த அளவோடு உலாப் பகுதி முடிகிறது.

தனது இல்லம் அடைந்த அதிரூபவல்லி, தன் தோழியைத் தாலந்தீர்த்தானிடம் தூதாக அனுப்பி அவன் மார்பிலணி குவளை மாலையைப் பெறுகிறாள். இங்கே நாம் தூது பிரபந்தத்தின் மரபும் காண்கிறோம் (374–381). தாலந்தீர்த்த செழியன் அதிரூபவல்லியின் மாளிகைக்கு வந்து அவளுடன் இன்பம் துய்த்து மகிழ்ந்து வாழ்

கிறன் என்று கலவியிற்களித்தலோடு இம்மஞ்சரி பிரபந்தம் முற்றுப் பெறுகிறது.

## இலக்கண நூல்களில் மஞ்சரி

'மஞ்சரி' என்னும் இப் பிரபந்த இலக்கணம்பற்றிப் பிரபந்த இலக்கணம் வகுத்துரைக்கும் பாட்டியல்கள் விளக்கமாக எதுவும் சொல்லவில்லை. பிரபந்த மரபியலும் இலக்கண விளக்கப் பாட்டியலும் மட்டுமே 'மஞ்சரி' என்பதைக் குறிப்படுகின்றன. பொருள், இடம், காலம், தொழில் என்னும் நான்கும் பற்றி வெண்பா அல்லது கலித்துறைப் பாவினுல் பாடப்படுவது மஞ்சரி என்கிறது பிரபந்த மரபியல். இதனுல் பொருள் இடம் காலம் தொழில் பற்றி நால்வகை மஞ்சரிகள் உள என்பது தெரியவரும்.

இலக்கண விளக்கப் பாட்டியலுடையார் 'வளமடல்' முதல் 'மஞ்சரி' ஈருகச் சொல்லப்பட்ட இருபத்திரண்டும் தனி நிலைப் பிரபந்தங்கள் எனத் தொகுப்புச் சூத்திரத்துள் சுட்டியுள்ளார் (சூ. 855). ஆனல், வகுத்து விளக்கம் கூறுமிடத்து இந்தப் பிரபந்த இயல் பினைத் தனிப்பட விளக்கினுரில்லை.

'.......... தூதாகு மிருதினை
போற்றுமஞ் சரியெனப் புலவர் நிலைபெறச்
சாற்றப் படுமத் தனிநிலைச் செய்யுள்'

எனவரும் தொகைச் சூத்திரத்தில் தூது பிரபந்தத்தை அடுத்து மஞ்சரியை வைக்கிருர். இதனுல் தூதுபோன்று கலி வெண்பாவினுல் மஞ்சரியும் அமையும் என்று குறிப்பிப்பதாகக் கொள்ளலாம்.

வீரமாமுனிவர் தம்முடைய சதுரகராதியில், 'மஞ்சரி ஓர் பிரபந்தம்' என்று பெயரகராதிப் பகுதியிலே குறிப்பிடுகிருர். ஆனல், அவர் பின்னர்த் தொகையகராதியில் விவரிக்கும் 96 பிரபந்தவகைகளுள் ஒன்ருகக் இதனையும் சேர்த்துக் கூறிற்றிலர். எனவே, 96 வகைப் பிரபந்தங்களுள் அடங்காது, பல்வேறு வகையாக வளர்ந்து பெருகிய பிற்காலப் புதுமைப் பிரபந்தங்களுள் ஒன்ருய் இம் மஞ்சரி மலர்ந்துள்ளது என்பது தெரியவரும்.

## முந்திய மஞ்சரி இலக்கியங்கள்

குறுநிலத் தலைவர்களை மகிழ்விப்பதற்காகவே காதல், தூது, கோவை, உலா, மஞ்சரி போன்ற காமச் சுவையை மிகுதியாய்க் கொண்ட சிறு பிரபந்தங்களைப் புலவர்கள் இயற்றிவரலானுர்கள். இவ்வகைப் பிரபந்தங்களை 15 ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த அருணகிரி நாதர் குறிப்பிடுவதனுல் 14 ஆம் நூற்ருண்டுத் தொடக்கமாக இவ் வகைப் பிரபந்தங்கள் மிகுதியாய்த் தோன்றலாயின என்பது தெரியவரும்.

'வஞ்சக லோபமூடர் தம்பொருளூர்கள் தேடி
மஞ்சரி கோவை தூது பலபாவின்
வண்புகழ் பாரிகாரி என்றிசை வாதுகூறி
வந்தியர் போல வீணில் அழியாதே'

(திருப்புகழ்—1236)

என வரும் அருணகிரிநாதரின் வாக்கு அக்காலப் புலவர்களின் வாழ்க்கைப் போக்கினை ஒருவாறு புலப்படுத்தும்.

16ஆம் நூற்றுண்டினரான படிக்காசுப் புலவர் தாம் பாடிய தொண்டை மண்டல சதகத்தில், காஞ்சீபுரத்தில் வாழ்ந்த ஞானப் பிரகாசர் என்பார் கிருஷ்ணதேவராயரின் மீது மஞ்சரிப்பாப் பாடினுர் என்பதைத் தெரிவிக்கிருர்.

'வானப்பிர காசப் புகழ்க்கிருஷ்ண ராயற்கு மஞ்சரிப்பா
கானப்பிர காசப் புகழாய்ந்து கச்சிக் கலம்பகஞ்செய்
ஞானப் பிரகாச குருராயன் வாழ்ந்த நலஞ்சிறந்த
மானப் பிரகாச முடையோர் வளர்தொண்டை மண்டலமே'

(தொண்டை. சத. 95)

என்பது படிக்காசுப் புலவரின் பாடல். எனவே, 15, 16 ஆம் நூற்றுண்டுகளில் 'மஞ்சரி' என்னும் பிரபந்த வகை புலவர்களால் பெரிதும் போற்றிப் பாடப்பெற்றது என்று கொள்ளலாம். என்ருலும், இவ்வகைப் பிரபந்தம் பலவாக நமக்குக் கிட்டாமல் எவ்வாருே மறைந்து போயிற்று.

## தாலந்தீர்த்த செழியன் மஞ்சரி

சேலம் அந்தாலந்தீர்த்த செழியன் வாழ்ந்த காலமோ 17-ஆம் நூற்றுண்டாகும். இப்பொழுது அறிந்த வரையில் 'மஞ்சரிப்' பிரபந்த வகைக்கு மாதிரியாக இந்தத் தாலந்தீர்த்த செழியன் மஞ்சரிப் பா ஒன்றுதான் கிட்டியிருக்கிறது.

## தாலந்தீர்த்த செழியன்

தாலந்தீர்த்த செழியனின் பெயர்க்காரணம், குடிவழி முதலியவைபற்றிய செய்திகளை நோக்குவோம். தாலந்தீர்த்த செழியனின் முழுப்பெயர் அந்தாலந்தீர்த்தான் என்பது. இது 'அந்தகாலம் தீர்த்தான்' என்பதன் மரூஉவாகும் என்பர். இவன் தான் வாழ்ந்த நிலப்பகுதிக்கு (உலகத்திற்கு) வந்த தீங்கைப் போக்கியதனுல் அந்த காலம் தீர்த்தான் என்று பெயர் பெற்ருன். 'அந்தகாலம்' என்ருல் முடிவுகாலம் போன்று அழிவு நேர்ந்த பெரும் பஞ்சகாலம் என்று கொள்ளலாம். அவன் ஆட்சிக்குக் கீழுள்ள நிலப்பகுதிக்கு, அப்பகுதி வாழ் மக்களுக்கு நேர்ந்த பெருந்திங்கைப் போக்கியமை

குறித்து யாவரும் அந்தகாலந்தீர்த்தான், அந்தாலந் தீர்த்தான் என்று பேசலாயினர் சின்ன சேலம் பகுதியில் வாழும் மக்கள் 'அந்தாலன்' என்னும் பெயரை இப்பொழுதும் சூட்டிக் கொள்கிறுர்களாம். இந்த மஞ்சரிப் பிரபந்தத்துள்ளும் அந்தாலந் தீர்த்தான், அந்தாலன் என்னும் வழக்குப் பயின்றுள்ளது. அந்தகாலந் தீர்த்தான், அந்தாலந் தீர்த்தான் என்பது சுருங்கித் தாலந்தீர்த்தான். அந்தாலன் என வழக்குப் பெறுதல் இயல்பே. அதியமான் நெடுமான் அஞ்சி என்னும் சங்ககாலக் குறுநில மன்னனின் பெயர், அதிகமான், அதியமான், அதியன், நெடுமான் அஞ்சி, அஞ்சி என்றெல்லாம் புலவர் வாக்கில் சுருங்கி இடம் பெறுதல்போல அந்தகாலந் தீர்த்தான் என்னும் பெயர் பல வடிவ மாற்றத்துடன் வழங்கத் தலைப் பட்டுள்ளது என்னலாம்.

அந்தகாலம் தீர்த்த செழியனுக்கு 'உலகங் காத்தான்' என்று ஒரு பெயரும் வழங்குகிறது. இவன் பெயரால் 'உலகங் காத்தான்' என்னும் ஊர் ஒன்று கள்ளக்குறிச்சி (கல்லக்குறிச்சி என்றும் பெயர்) வட்டத்தில் உள்ளது. அவ்வூர் இப்பொழுது, 'உலங்காத்தான்' என்று சிதைந்து வழங்குகிறது. இலக்கியங்களில் இவ்வூர் 'உலகாபுரம்,' 'உலகை' என்று வழங்கப்பட்டுள்ளது. இம்மஞ்சரிப் பிரபந்தமும் உலகையூரைச் சுட்டியுள்ளமை காணலாம் (149-151).

## குடிவழி மரபு

அந்தாலந்தீர்த்த செழியனின் குடிவழி மரபு பற்றிய செய்திகள் சிலவும் இம்மஞ்சரிப் பிரபந்தத்தில் காணப்படுகின்றன (157-181). அந்தாலந்தீர்த்த செழியனுக்கு மூதாதையராகத் தமிழ்மாலைச் செழியன், தியாகப்பிரமச் செழியன் என இருவர் குறிக்கப்படுகின்றனர் (157–160).

மேலும், இவன் சிற்றுஞ்செழியன், திருவேங்கடவன் என்னும் இருவருக்கும் பேரனுக வந்தவன் என்றும் மஞ்சரி கூறுகிறது (161-162). எனவே, இவ்விருவரையும் முறையே தந்தைவழி - தாய் வழிப் பாட்டனுராகக் கொள்ளலாம். இவனுடைய தந்தை பெயர் 'இருள் நீக்கும் செழியன்' என்பதாம் (166).

இச்செழியனுக்குத் தமையன்மாராக மெய்க்கும் பெருமாள், சூரப்பவாணன், தேவேந்திரன் தாகந்தீர்த்தான் என மூவர் உள்ளமையையும் இம்மஞ்சரிப் பிரபந்தம் காட்டுகிறது (169–173).

இவனுக்குப் புதல்வர்கள் நால்வர். அவராவார், வினைதீர்த்த செல்வன் (176), தாகந்தீர்த்தான் (177), திருவேங்கடவன் (178), இருள் நீக்கின பெருமாள் (179) என்பவராவர். இவனுடைய மைத்துனனின் பெயர் உலகுடையான் (181) என்பதாம்.

அந்தாலந் தீர்த்தானின் சந்ததியர் குறித்துக் குகையூர்த் தமிழ்ப் புலவர் பெருமகனுர் திரு. அடிகளாசிரியர் அவர்கள் எழுதி விடுத்த குறிப்பு பின்வருமாறு :

"அந்தாலந் தீர்த்தானுக்கு ஐவர் புதல்வர் பிறந்தனர் ; அவருள் முதல்வனுக்குத் தாகந்தீர்த்த செழியன் என்றும், இரண்டா மவனுக்கு திருவேங்கடச் செழியன் என்றும், மூன்ருமவனுக்கு எம்பிரான் செழியன் என்றும், நான்காமவனுக்குச் சட்டைச் செழியன் என்றும், ஐந்தாமவனுக்குத் தீர்த்தான் செழியன் என்றும் பெயராகும்.

தாகந்தீர்த்த செழியனின் மகன் ஒருவன் அவன் பாட்டன் பெயராகிய அந்தாலந்தீர்த்த செழியன் என்னும் பெயரை வைத்துக்கொண்டான்.

திருவேங்கடச் செழியனுக்குக் கங்காதரச் செழியன், நடராச செழியன் என்று இருபுதல்வர் தோன்றினர். மற்றவர் தம் புதல்வரைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை."

திரு. அடிகளாசிரியர் தரும் இக் குறிப்பு மஞ்சரி நூல் தரும் கொடிவழியிலிருந்து சிறிது மாறுபடுகிறது (176—180). இவர்கள் வரலாறு மேலும் நன்கு ஆராயத்தக்கது.

## *தாகந் தீர்த்த செழியன்*

தாலந் தீர்த்த செழியனின் மகனுகிய தாகந் தீர்த்தான் தன் தந்தையைப் போலவே புலவர் பலர் போற்ற வாழ்ந்த வள்ளலாகத் திகழ்ந்தான் என்பது தெரியவருகிறது. 'தாகந் தீர்த்தான்' என்னும் பெயர் வந்த வரலாறு பற்றி அந்தப் பரம்பரையினர் கூறும் சுவை யான செய்தி ஒன்று உள்ளது. அந்தாலனுக்குச் சில குழந்தைகள் பெறப் பெற இறந்து விடவே, தாகந் தீர்த்தான் தாய் வயிற்றில் கருவுற்றிருக்கும்போதே, அத்தாயைப் பக்கத்தில் உள்ள ஓர் ஊருக்கு அனுப்பிவைத்து, அங்கேயே குழந்தை பிறக்க வழி செய்தனராம். அங்குப் பிறந்த இந்தக் குழந்தை தங்கவே தனக்குப் பிள்ளை வேண்டும் என்னும் தாகத்தைத் தீர்த்தான் என்பது கருதித் தாகந்தீர்த்தான் என்று பெயர் வைத்தனராம். இது குறித்துத் திரு. அடிகளாசிரியர் வரைந்துள்ள செய்தி பின்வருமாறு:

"தாகந் தீர்த்தான் என்னும் பெயர்க் காரணம். (அப்பரம் பரையினர் என்னிடம் கூறியது)

செழியதரையன் பரம்பரையினர் இன்னும் சின்ன சேலத்தில் உள்ளனர். அவர்கள் பிற்காலத்தில் பாளையக் காரராய் மாறிவிட்டனர். 'நயினர்' என்று பட்டப் பெயரை மாற்றிக் கொண்டனர்.

அந்தாலந் தீர்த்த செழியனுக்கு மகவுகள் பிறந்து பிறந்து உயிரோடு இராமல் இறந்து கொண்டே வந்தன. தன் மனைவி கருவுற்றிருந்த காலத்தில் தன் ஆட்சிக்குட்பட்ட கலடியாபுரம் என்னும் ஊரில் கொண்டுபோய், அங்கே பிரசவத்திற்குத் தங்கச் செய்தான். அங்குப் பிறந்த குழந்தை சாகாமலிருந்தது. தங்கட்குப் புத்திரர் இல்லை என்ற தாகத்தைத் தீர்த்ததால் அக் குழந்தைக்குத் 'தாகந் தீர்த்தான்' என்று பெயர் சூட்டினர். அந்தக் குழந்தை பிறந்த ஊருக்குத் 'தாகம் தீர்த்தான் புரம்' என்று பெயர் வைத்து வழங்க லாயினர்.''

'தாகந்தீர்த்த செழியன் 'பிள்ளைத் தமிழ்' என்னும் பிரபந்தத்தின் ஈற்றில் வரும் வாழ்த்துப் பாடல் அந்தாலந் தீர்த்த செழியனின் புதல்வர் ஐவர் என்பதனைச் சுட்டுகிறது.

' தார்வாழி உலகுய்ய வந்தகா லக்கொண்டல்
அந்தகா லந்தீர்த்தவன்
தந்ததா கந்தீர்த்த செழியனும் இவர்க்குயிர்த்
தம்பிதிரு வேங்கடவனும்,
ஏர்வாழி மற்றிவற் கிளவலாம் இருணீக்கும்
எம்பிரான் வாழி யிவனுக்
கினியவனு சன்சட்டை யான்வாழி யீங்கிவற்கு
இளைய தீர்த்தவனும் வாழி
சீர்வாழி ஐவர்க்கும் உற்றதுணை யாந்திருப்
பொன்பரப்பு நாதனும்
தினம்வாழி சேலம் திருப்பாலை உலகைச்
செழும்பதி செழித்து வாழி !'

அன்றியும் இப் பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தத்தின் தொடக்கத்திலும்,

' உலகுபதி நான்குந் திகந்தங்க ளிருநான்கு
முழுகொழுக் கொண்டு முழுதாண்
டொருகுடைக் கீழ்வைத்த செழியதரையத்
திலத னுலகர் புரேசநிதியிற்
பல்கு பொன் திரண்டனைய வந்தாலன்
பயந்த தாகந் தீர்த்தகோன்
பருவத் திளம் பிள்ளையம் பாடலொருநூறு
பழுதறுத் தெழுது துணையாம்...'

என வரும் பகுதி அந்தாலந்தீர்த்தானின் புதல்வன் தாகந்தீர்த்தான் என்பதனைக் குறிப்பிடுதலும் காணலாம்.

இந்தத் தாகந்தீர்த்த செழியனை அந்தகக்கவி வீரராகவ முதலியார் சிறப்பித்துப் பாடியுள்ளார். அந்தகக்கவி வீரராகவ முதலியார்

இச் செழியனுக்கு விடுத்த சீட்டுக்கவி ஒன்றும், அவன் அது கண்டு பரிசில்தர, மேலும் சில பொருள் வேண்டிப் பாடிய பாடல் ஒன்றும் 'தமிழ் நாவலர் சரிதை'யில் (250-251) காணப்படுகின்றன. அவை வருமாறு:

'ஏடா யிரங்கோடி யெழுதாது தன்மனத்
தெழுதிப் படித்த விரகன்
எதுசொலினு மதுவே யெனச்சொலுங் கவிவீர
ராகவன் விடுக்கு மோலை
சேடாதி பன்சிர மசைக்குங் கலாகரன்
திரிபதகை குலசேகரன்
தென்பாலை சேலஞ் செனித்ததா கந்தீர்த்த
செழிய னெதிர் கொண்டு காண்க
பாடாத கந்திருவ மெறியாத கந்துகம்
பத்திகோ ணுத கோணம்
பறவாத கொக்கனற் பண்ணுத கோடைவெம்
படையாய்த் தொடாத குந்தம்
சூடாத பாடலம் பூவாத மாவொடு
தொடுத்துமுடி யாத சடிலம்
சொன்னசொற் சொல்லாத கிள்ளையொன் றெங்குந்
துதிக்க வரவிட வேணுமே.'

'சாலப் பழுத்த மரம்பார்த்
தெறிவர்தண் ணீர்சுரக்கும்
ஞாலத் தகழ்வர் கறக்கின்ற
வாவைநற் காறளைவர்
நீலக் கடல்விட்டுப் பாலாழி
மத்திட்டு நிற்பரிந்நீர்
சேலத்து வேந்த னகத்தாகந்
தீர்த்த செழியனுக்கே.'

## திருவேங்கட செழியன் முதலியோர்

அந்தாலந்தீர்த்த செழியன் புதல்வர்களுள் மூத்தவராகக் கருதப் படும் தாகந்தீர்த்தான்மட்டும் புலவர்களின் போற்றுதலுக்குரித்தா யிருந்தான் என்பதில்லை. அவனுடைய ஏனைய சகோதரர்களும் புலவர் பாராட்டும் பெருமைபடைத்து விளங்கினர் என்பது அவர்கள் பெயரால் வழங்கும் சில நூல்களால் அறியலாகும்.

சேலம் திருவேங்கட நயினரவர்கள்பேரில் 'நன்னெறி நாற்பது' என்னும் நூல் ஒன்று உளது. நீதி உரைக்கும் இந்நூலில் காப்பு முதலியன உட்பட 43 செய்யுள்கள் உள்ளன. நூலின் காப்புச் செய்யுளும் முதல் இறுதிச் செய்யுள்களும் வருமாறு :

'தெள்ளு தமிழ்வல்ல சேலஞ் செழியனுக்கே
உள்ளபடி நீதி யுரைக்கவே — வள்ளல்
திருமுகவன் வெற்றிச் செழுங்கமலத் தெந்தை
கரிமுகவ னிக்கதைக்குக் காப்பு.'

'நீரா மதற்கு மறிவொன் றிலானுக்கும் நீதிசொன்ன
பேராளர் தாமற் றெருவர் கொல்லோ பெரும்பாரங் கண்டாய்
பாராது தாழ்விக்கும் நொய்து கண்டாய் பரிந் தேத்துங்கண்டாய்
வீரா கார வுலகைச் செழியா திருவேங்கடமே.' (1)

'கொடுப்பா ரிலையெனி லேற்போர் விட்டார் நற்குளத்திற் தண்ணீர்
எடுப்பார் நிரம்பி யிருந்தா லதிற்சல மில்லையென்றால்
கடப்பாரை கையிற்கொண் டூற்றூறத் தோயமுங் காண்பரதை
விடுப்பார்க ளோஉரை யாய்செழி யாதிரு வேங்கடமே.' (43)

இத்திருவேங்கட செழியனின் புதல்வர்களுள் முதல்வனாகிய கங்காதர செழியன்பேரிலும் சில நூல்கள் உள்ளன. கங்காதர செழியதரைய நயினார்பேரில் வண்ணம், கங்காதர செழியன்பேரில் திருவாணி வாது, கங்காதர செழியன்பேரில் பஞ்சதந்திரம் என்னும் மூன்று நூல்கள் உள்ளனவாக ஏட்டுச் சுவடிகளிலிருந்து தெரிய வருகிறது.

## *மஞ்சரியின் ஆசிரியர்*

இம் மஞ்சரிப் பிரபந்தத்தின் ஆசிரியர் பெயர் தெரியவரவில்லை. தாலந்தீர்ந்த செழியன் வாழ்ந்த காலமாகிய 17ஆம் நூற்றாண்டில் இவரும் வாழ்ந்தவராதல் வேண்டும். இச் செழியனால் ஆதரிக்கப் பட்ட புலவர்களுள் இவரும் ஒருவராயிருத்தல் வேண்டும். செழிய னின் பல்வேறு சிறப்புகளையும் மிகுந்த ஈடுபாட்டோடு இவர் எடுத் துரைத்துள்ளார். பிரபந்த இலக்கிய மரபுகளையும் தமிழ் மரபுகளையும் ஒட்டியே இவருடைய வருணனை முதலியன அமைந்துள்ளன. இவருடைய வாக்குகள் நூல் முழுமையும் மிகமிக மிடுக்காயும் நய மாயும் உள்ளன.

வித்தைகளுள் இசைக்கலையே பெரிது என்பதனை வலியுறுத்து வதற்காக இசையினால் நிகழ்ந்த அற்புத நிகழ்ச்சிகளையும் எடுத்துக் காட்டுகின்றார். காந்திருவதத்தை, உதயணன் இவர்களின் இசை வன்மையை இவர் எடுத்துக் காட்டுவதால், சீவகசிந்தாமணி, பெருங் கதை முதலிய இலக்கிய - இலக்கணங்களையெல்லாம் இவர் கற்றுப் போற்றியவர் என்பது தெரியவரும். இச் செழியனும் கலிங்க நாட்டை வென்று கலிங்கப்பரணி கொண்டான் என்று சிறப்பிக்கப் படுகின்றான். இல்வாறாக முந்திய நூல்களைப்பற்றிய குறிப்பும் திருவிளையாடற் புராணம் போன்ற காவியங்களின் நிகழ்ச்சிகளும் அங்கங்கே காணப்படுகின்றன. இவற்றால் இவர் தமிழ் நூல்களில் நிரம்பிய புலமையுடையார் என்பது தெரியவரும்.

## ஏட்டின் நிலைமை

ஏட்டின் தன்மைபற்றியும் சில வார்த்தைகள். இது ஒரு பழைமையான ஏடே. இதுவும் இச்செழியன் வழியினரான வேறு சிலரைப்பற்றி அமைந்த சில பிரபந்தங்களும் ஒரு கோப்பாக அமைந்திருந்தன. இந்த ஏடு சின்னசேலம் பகுதியைச் சார்ந்ததே. ஏட்டின் இறுதியில் காணப்படும் ஏடெழுதியோர் குறிப்புப் பின்வருமாறு காணப்படுகிறது :

> "சாதாரண ஸு பங்குனி மீ சுக்கிரவாரம் சட்டியும் பூர்வபட்சமும் ரோகணி நட்சத்திரமும் கூடின சுபதினத்தில் சாயங்காலம் அமுதகெடிகை 29 நாழிகையில், சேலத்துத் துரந்தரனுன ராச விசைய மன்மத பஞ்சபாணுவதாரனுன செழியதர நயினுரவர்கள் துரையவர்கள்பேரில் மஞ்சரி. சேலத்தில் சம்பிரதி சாமுண்டியா பிள்ளையவர்கள் குமாரன் செல்லமுத்தா பிள்ளை குமாரன் வயித்தியலிங்கம் மஞ்சரி எழுதி நிறைவேறியது. முற்றும்.

> "இந்த மஞ்சரி வாசிக்க வச்சது ஆரென்னில் செறு வெங்கை புரியிலிருக்கும் கம்மாள சுவாமியார் குமாரன் சென்ன பஸவையர் குமாரன் சுப்பராயன் கையெழுத்தும் நம்முடைய தீட்சையில் வாசிச்சது."

இக் குறிப்பிலிருந்து இம் மஞ்சரி ஏட்டுப் பிரதியை எழுதிவைத்தவர் சேலம் வயித்தியலிங்கம் என்பார் என்பது தெரியவரும். சின்ன சேலம் பகுதியை ஆண்ட சிற்றரசனைப் பற்றிய இப் பிரபந்தம் அந்தப் பிரதேசத்தில் பெரும்பாலும் பயின்று வந்திருத்தல் இயல்பே.

இப் பதிப்பிற்குப் பயன்பட்ட ஏடு சின்ன சேலம் பகுதியைச் சார்ந்த குகையூர்ப் பெரும் புலவர் திரு. அடிகளாசிரியர் அவர்களிடமிருந்து பெற்றதாகும். தாம் சேமித்துவைத்துள்ள ஏட்டுச் சுவடிகளிலிருந்து இந்த ஏட்டை அச்சிடுவதற்காகத் தந்துதவிய திரு. அடிகளாசிரியருக்கு என் நன்றி முதற்கண் உரித்தாகுக.

நூலின் முகப்பிலே ஒரு தனி ஏட்டில் முன் பக்கம் விநாயகர் காப்பும், பின்பக்கம் 'சந்திரசேகர விநாயகர் துணை' என்னும் வாக்கியமும் உள்ளன. நூல் அடுத்த ஏட்டில் தொடங்குகிறது. இதற்கே ஒன்று (க) என்னும் எண் தரப்பட்டுள்ளது. மொத்தம் 32 இதழ்கள் இதில் உள. 32 ஆம் ஏடுமட்டும் ஒரு பக்கம் எழுதப்பட்டுப் பின் பக்கம் வெற்றிடமாக உள்ளது. ஆக நூற்பகுதி 63 ஏட்டுப் பக்கங்களில் எழுதப்பட்டுள்ளது. பக்கத்திற்கு 5 வரிகளும் 6 வரிகளுமாகக் கலந்து காணப்படுகின்றன.

## பிற்சேர்க்கைகள்

இம் மஞ்சரிப் பிரபந்தத்தில் இடம் பெற்றுள்ள ‘சிறப்புப் பெயர் முதலியவற்றின் அகராதி’ இணைக்கப்பட்டுள்ளது. இதன்வழி இப் பிரபந்தத்தின் சொல்வளம் அறியலாகும். மற்றும் இதில் இடம் பெற்றுள்ள புராண-வரலாற்றுச் செய்திகள் பற்றிய ஓர் அட்டவணை யும் இறுதியில் இணைக்கப் பெற்றுள்ளது.

## பிரபந்தங்களின் நிலையும் பயன்பாடும்

பிரபந்தங்கள் பல்வேறு வகையில் அந்தந்தக் காலச் சூழலுக்கு ஏற்பத் தெய்வத்தைப்பற்றியும் மக்களைப்பற்றியும் தொடர்ந்து புலவர்களால் பாடப் பெற்று வந்துள்ளமை காணலாம். அவை யெல்லாம் மக்கள் மத்தியில் இடம் பெற்று நிலையான வாழ்வு பெற வில்லை. பிரபந்தங்களுள் எத்தனையோ பெயரளவில் அறியப் படுவனவாயுள்ளன. இலக்கணப் புலவர்கள் எடுத்தியம்பும் சிற்சில வகைகளுக்கு எல்லாம் இலக்கியங்கள் இன்று காண்பது அரிதா யுள்ளது. இதற்குக் காரணம் பிரபந்தங்கள் மக்கள் வாழ்வோடு ஒன்றி நிலைபெறுமையேயாம்.

அந்தாதி, கலம்பகம், பிள்ளைத் தமிழ், உலா, தூது, கோவை போன்ற சிலவகைப் பிரபந்தங்கள் பல காலங்களிலும் மிகுதியாய்த் தோன்றி வாழ்வு பெற்றுள்ளன. ஒருகாலத்து மிகுவழக்காயிருந்து பின் அருகிவரும் தன்மையனவும் சில உள. இவ்வகையைச் சார்ந்ததே இந்த மஞ்சரிப் பிரபந்தம்.

எந்தப் பிரபந்தத்தை எடுத்துக் கொண்டாலும் அவற்றின் பொருள்கள், வருணனைகள் முதலியவற்றில் ஓர் ஒருமைப்பாடும், அவற்றுள்ளே சிற்சில அருமைப்பாடும் காணப்படுகின்றன. ஒவ் வொருவகையிலும் மரபு நிலையில் மாறுமல் நின்றே புதுமைகளைப் படைக்கவும் பின்வந்தோர் முயன்றுள்ளனர்.

தமிழின் வளமும் நடை நலமும் பிரபந்த இலக்கியங்களிலும் சிறப்புற்றுக் காணப்படுகின்றன. சொற்கோவைகளும் புதுப் பொருள்களும் வளர்ந்துவரும் பாங்கினை அளந்தறிவதற்கும் பிரபந்தங்கள் பேருதவிபுரிய வல்லன. ஆதலால், பிரபந்த இலக்கி யங்களும் போற்றிப் பாதுகாத்துப் படித்துப் பயன்பெறத்தக்கவையே. இந்தவகையில் ‘மஞ்சரி’ என்னும் பிரபந்தவகைக்கு ஓர் எடுத்துக் காட்டாக இந்தத் தாலந்தீர்த்த செழியன் மஞ்சரியும் உள்ளது. இதனைக் கற்றுப் போற்றித் தமிழன்பர்கள் பயன்பெறுவார்களாக.

சென்னை—5
15—4—78

மு. சண்முகம் பிள்ளை

# சேலம் தாலந்தீர்த்த செழியன்மீது மஞ்சரி

### காப்பு

தேமாலை யந்தாலந் தீர்த்தசெழி யன்மீதில்
மாமாலை யேபுகழு மஞ்சரிக்குப்—பூமாலை
துளித்தானைத் தானைமுக னுதரித்த வானைக்
களித்தானை யானைமுகன் காப்பு.

*　　　*　　　*

பூமேவு தெய்வப் புலங்கமலப் பொற்பொகுட்டு
மாமேவு தண்டுளப மார்பினு—னுமே 1

வெழுத்தும் பொருளு மெனவே யுலகம்
வழுத்தும் படிகாத்த மாயோன்—முழுத்திகிரிக் 2

கையும் வலம்புரியங் கையுஞ் சிவவாமல்
மெய்யும் புணரி மெலியாமல்—வையம் 3

வருந்தாம லால மழுவுவந்தார் வாங்கி
யருந்தாமல் வந்த வமுதங்—கருங்கல் 4

லுரையாத செம்பொ னுவட்டாத செந்தேன்
வரையாத சித்ர வடிவங்—கரையா 5

லடைபடா மோகப்போ ராறுகால் வண்டு
குடைபடா கற்பகப்பூங் கொம்பு—நெடியமறு 6

மானுக மீனுத மாமதிய முள்வெருளு
மானுக மீனுத மாணிக்கங்—கானுலவாச் 7

செவ்வந்தி மாலை தினமாலை யேவளர்க்குஞ்
செவ்வந்தி மாலைச் சிறுதிங்கள்—பவ்வ 8

---

காப்பு: விநாயகர் காப்பு.
1—21 அதிருபவல்லியின் பண்புநல வருணனை.

வனப்புவன மேவா மலரால் மயக்கும்
வனப்புவன மேவா மயூரஞ்—சினத்திடிக்கும் 9

வாரியெழி லிக்கு மயங்காக் குயில்பெண்மை
வாரியெழி லிக்கு மதன்வாழ்வு—சீரிரதித் 10

தென்மலேயத் தோடாச் செழுங்காந்த ளங்கானத்
தென்மலேயத் தோடாச் சிறுதென்றல்—நன்மை 11

மதித்த தருக்குலவா வச்சிரமுன் னீரின்
மதித்த தருக்குலவா வல்லி—முதற்கிரியின் 12

னங்கிள்ளே யும்போத கக்கிள்ளே யும்பிடித்த
பைங்கிள்ளே யுந்தாழ் பசுங்கிள்ளே—யங்கரக்கன் 13

விட்டமா னுஞ்சசியில் வீற்றிருக்கு மானுமரன்
ஞெட்டமா னும்போய்த் துதிக்குமான்—தெட்டமர்வேள் 14

ஆவிக்கு மாவி யரவிந்தப் பூங்கோவிற்
றேவிக்குஞ் சேவிக்குந் தேவாரம்—பூவிற் 15

சுரும்பை வணக்கத் தொடுநாணுய்க் கொண்ட
கரும்பை வணக்குங் கரும்பு—விரும்பு 16

மமல விரதத் தருந்தவத்தோ ருள்ளக்
கமல மலர்த்துங் கமலஞ்—சமயத் 17

துளக்கை மறைக்குந் தொழில்முனிவர் ஞான
விளக்கை மறைக்கும் விளக்கு—கிளேக்கின்ற 18

வாராமஞ் சேரா வருங்கோ கிலவமுதந்
தீராமஞ் சேராச் சிறுமின்னல்—பாரேழின் 19

மெய்த்த விளேஞர் வியன்வடிவை வேயீன்ற
முத்தர் வடிவஞ்செய் மூழ்முற்றும்—அத்தி 20

படிவிற் பிறவாப் பவளஞ் செழுங்கா
நடுவிற் பிறவா நறவங்—கடல்முகந்தக் 21

காரை நிகரக் கறித்து வனஞ்செறிந்து
வாரி விரவிமுல்லே வந்தடைந்து—தாரணியைத் 22

21—82 கேசாதிபாத வருணனே.

21—25 குழல் (கூந்தல்).

தாங்கி யகிலந் தனையுண்டு மாமரவற்
றேங்கி யொருதிருவை யுற்றணிந்து—வாங்கரிய 23

நெய்த்தடவி நேர்ந்து சுருங்கி நெடுகிமேல்
வைத்தபகல் கங்குல் வருவித்து—மொத்த 24

விராவண ஞண மிகல்பொருது மால்போற்
குராவணியு மாலைக் குழலாள்—விராவியசீர் 25

பூத்த வளகப் புயற்கீழும் பேரழகு
வாய்த்தபிறை போலும் வாணுதலாள்—கூர்த்த 26

விளைஞர் தனுவு மிரதிபதி வில்லும்
வளைய வளைந்த புருவத்தாள்—கிளைகொண்ட 27

மாவை நெருக்கி மறிகடலை யுங்கடந்த
மேவு மயில்விலங்கி மீன்பயின்று—பூவிற் 28

குவளையாய் நின்று குவடுநனி வென்று
திவளச் சரவணத்திற் சேர்ந்து—கவினெறிப்ப 29

நன்குறமா னிற்பொலிந்து நாகா பரணனது
பின்குமரன் போலப் பிறங்கியே—வன்கூ 30

ரரத்தை முறுக்கி யயிற்கறுவிக் கூற்றி
னுரத்தை நெருக்கி யொறுத்து—திரைக்குள் 31

விடத்தை வெருட்டி வியன்சக் கிரவாளத்
திடத்தை யளந்து மயக்கிட்டுத்—துடித்துச் 32

சதகோடி யாளைத் தளைப்படுத்தி லீலா
விதகோடி யும்படிந்து மேன்மேல்—முதிர 33

வடுங்கொலை வஞ்ச மருங்குல வெங்கும்
நடுங்குதல் கொண்டு நடந்து—நெடுங்குழல் 34

வண்டை வெகுண்டு மணங்கம ழுங்குமி
ழண்டை முயங்கி யகம்புற—மண்டிமுன் 35

னோடி யுலாவி யுபாயமோ டேவிளை
யாடி நிலாவணி யாவணீ—நீடி 36

---

25—26 நுதல். 27—37 கண்.
26—27 புருவம்.

உரிய தவரை யுளமுருகச் செய்யும்
கரிய பெரிய தடங்கண்ணுள்—இருவிழியா 37

லேயுஞ் சகோர மிரண்டுண்ண வெண்ணிலவு
காயுங் குழைத்தரளக் காதினுள்—தூயகதிர் 38

கண்ணுடி யொத்த கருத்தா கருத்தழிக்குங்
கண்ணுடி போலுங் கபோலத்தாள்—வெண்ணிலவே 39

யாகுமிழை முத்த மணிநாசி முல்லைமுகிள
மாகுமிழை யொத்ததென மானுவாள்—பாகொழுகு 40

மென்பவளம் போற்சிவந்து வெண்கற் புரவாசத்
தின்பவளங் காட்டு மிதழினுள்—அன்பால் 41

முருந்துந் தளவரும்பு முத்துமமைத் தென்னத்
திருந்து முறுவல் திகழ்வாள்—கருஞ்சிலைக்கு 42

நண்ண வுயிர்ப்பு நயந்துதர லாற்கரிய
வண்ண னெனச்சிறந்த வார்த்தையாள்—விண்ணகத்தி 43

னந்தண் மதிமுனிவ தல்லால் மதியைமுனி
செந்தண் முளரித் திருமுகத்தாள்—வந்தினைஞர் 44

கண்டசரச் சங்காய்க் கமுகாய்க் கதிர்முத்தாய்க்
கண்டசரம் பூண்ட களத்தினுள்—கண்டவர்க்குக் 45

காமக் கனலிழைக்குங் கானக் கழைமாது
தாமத் தரத்தார் தடந்தோளாள்—பூமுழுதும் 46

விற்கு மகர மிதுனமீ னம்படவே
கற்கடகந் தாங்கியமுன் கையினுள்—நற்குவியப் 47

பங்க யமனையில் மெய்த்திருநீங் காதகயப்
பங்க யமனைய கையாள்—பயத்திற் 48

---

37—38 காது.
38—39 கபோலம் (கன்னம்).
39—40 நாசி.
40—41 இதழ் (உதடு).
41—42 முறுவல் (பல்)
42—43 வார்த்தை.
43—44 முகம்.
44—45 களம் (கழுத்து).
45—46 தோள்.
46—47 முன்கை.
47—48 கை.

சுகமே முகமெடுப்பத் தோற்று வனமே
நகமே புகுத்து நகைத்தாள்—நிகரிலா 49

வாய்த்தரளத் தோடும் வாதாடி யீர்விடத்து
மேயபுண்ட ரீகத்தை மேலடர்ந்து—காயுங் 50

கரியை முனிந்துகன்னி காரங் கடுத்துப்
புரியுமஞ் சக்கரத்தின் புள்ளா—யிருவரையும் 51

வைத்த வடிவுபெற்று மாமேருவை வணக்க
வித்தகமாங் கண்டமது மெய்கறுத்து—நித்திலத்து 52

வாரினஞ் சார்ந்து வடத்தி னிழல்புகுந்து
சீரிய பொற்பணியே சேர்த்—தணிந்துகூர்த் 53

துடிநடுக்கி யம்பரத்தி னேகாயஞ் சூழ்ந்து
நெடிய வழுதெடுத்து நின்று—கடிது 54

மணச்சந் துரைத்திட்டு மாதேவர் போலப்
பணைத்துத் தளதளத்துப் பாரித்—தணைக்கும் 55

பிடிக்கச் சறுக்கிப் பிரமிக்கப் பெருத்துப்
பொடிக்கற் புரத்திற் புதைத்துத்—தடித்துக் 56

கனத்துக் குமிழ்த்துக் களித்துத் திளைத்துச்
சினத்துத் தவத்தைச் செறுத்து—வனப்புடைத்தாய் 57

வெச்சென்று தண்ணென்று மெத்தென்று சிக்கென்று
பச்சென்று காதம் பரிமளித்து—வச்சிரப்பூண் 58

பூண்டு நிமிர்ந்து பொருமிப் பெருமுகடு
தாண்டு முபைய தனத்தினுள்—காண்டகையக் 59

கொங்கைக் கிரியிரண்டு கோட்டி நடுவீழ்ந்த
வங்கை வழகொழுக்க மாமென்னச்—செங்கை 60

யொருபொருப்பு மாலெடுப்ப வொப்பலவென் றிந்த
விருபொருப்பு மாலெடுப்ப தென்ன—முருகு 61

திரண்ட கருந்தேன் செழுந்தாரைக் குன்ற
மிரண்டு நடுவிழுந்த தென்ன—நிரம்பித் 62

---

*48—59* தனம். *59—64* உரோமவழி.

துலங்கி யெழுந்த துணைமுலைப்பூ ணீல
மிலங்கி விழுஞ்சோதி யென்ன—வலங்கல் 63

தயங்கு களபத் தனநடுவே வீழ்ந்து
வயங்கு முரோம வழியாள்—வியன்கண் 64

திடபத் திரமாந் திருமணவன் வைகும்
வடபத் திரநேர் வயிற்றுள்—நெடுநூல் 65

வழிபேர் முனிவர் மனத்துமய லாற்றுச்
சுழிபோலு முந்திச் சுழியாள்—இமையோ 66

துடியோ வணுவோ சுருதியோ மின்னே
கொடியோ வரியரவோ கொம்போ—வடுகோ 67

ளரியோ வுருவிலியோ வம்படியோ விண்ணே
தெரியோ மெனப்பலருஞ் செப்பச்—சொரிதேன் 68

புடையின் சுரும்பு பொருசிறகின் காற்றுக்
கிடையுஞ் சிறுநுண் ணிடையாள்—கடவுளரே 69

மோக விளைஞோர் முதுபாற் கடலுமே
யாக வமுதூறு மல்குலாள்—மாகருப்பு 70

வில்லரம்பை யென்ன விழியரம்பை தைவருட
நல்வரம்பை யென்ன நறுந்தொடையாள்—மல்கும் 71

பயவலவன் போலுமுழம் பாதத்தாள் தென்றல்
வயவலவன் பூசல் வளர்ப்பாள்—புயநிலத்து 72

மின்னிவரால் வைகும் விறலோன் மகன்வணங்கும்
கன்னிவரா லன்னகணைக் காலினள்—மன்னுமலர்ப் 73

பெண்ணி னழகுந்தன் பேரழகுந் தூக்கவயன்
பண்ணு துலையன்ன பரட்டினள்—விண்ணோர் 74

தழைந்துதொழு மிந்திராணி தாமரைப்பூம் பாணிக்
குழைந்துதொழும் பந்தாங் குதியாள்—செழுங்கொடியே 75

---

64—65 வயிறு.
65—66 உந்திச்சுழி.
66—69 இடை.
69—70 அல்குல்.
70—71 தொடை.
71—72 முழம் பாதம்.
72—73 கணைக்கால்.
73—74 பரடு.
74—75 குதி.

யன்னூர் குழாமுமத னுவியையு நீங்காதப்
பொன்னூர் கமடப் புறந்தாளாள்—மின்னு 76

துகிரும் வயிரமுமே சூழ்ந்ததெனப் பத்து
முகிரும் விரலு மொளிர்வாள்—இகலற் 77

றடங்கமலந் தீர்ப்பாரத் தக்கமலந் தீராத
தடங்கமலம் போலுமிரு தாளாள்—நடந்தயனுஞ் 78

சேயுந் தொடரத் திருநடையுஞ் சாயலும்போற்
றேயு மதனனையு மேவுவா—ளாயுங்கால் 79

வாளி நயனமதன் றேவியுந் தன்காற்
றாளி திலதமிடத் தோன்றுவாள்—நாளுந் 80

திரதெய்வ ரம்பையர்க்குச் சீரழகு நல்க
வரதெய்வம் போல வருவா—ளிருதாள் 81

திருவு மிரதியும்போய்ச் சேவிக்கச் செல்வ
மருவு மதிரூப வல்லி—யருகிருந்தா 82

ரண்டையில் வீசு மருங்குலிகச் சேற்றினுற்
பண்டை மலர்மகளாய்ப் பாவிப்பார்—மண்டுகருப் 83

பூர விமசலத்தாற் புண்டரிக னுவிலலங்
காரக் கொடியாய்க் கவினெறிப்பார்—பூரித்த 84

துய்யநறுங் கத்தூரி சோருங் சிவிறியா
லையை வடிவொத் தழகெழுவார்—கைசிவப்பத் 85

தேய்த்தநறுங் குங்குமத்தின் சேற்ருற் கனகநிறம்
வாய்த்த திருபுரையை மானுவார்—தோய்த்தப் 86

பளிங்கு நிறத்துப் படியன்ன மென்னத்
துளங்கு புனல்சிலம்பத் தோய்வார்—குளங்கமிழ்தந் 87

---

75—76 புறந்தாள்.
76—77 உகிர், விரல்.
77—78 தாள்.
78—79 நடை.
79—80 தோற்றம்.
80—81 வருகை.
81—82 அதிருபவல்லி.

தோய்ந்தெழு தோற்றஞ் சுரிமுகஞ்சூழ் பாற்கடலில்
வாய்ந்தெழு மாதர் வளமொப்பார்—பூந்தண் 88

கருங்குவளைக் காட்டுக் கருமுகில் மின்போல்
மருங்குவளை யோடும் மகிழ்வார்—சுரும்பருஞ் 89

செந்தா மரைவனத்துச் செவ்வந்தி வான்பூத்த
நந்தா வுடுக்குலம்போல் நண்ணுவார்—பைந்தடத்தை 90

மின்னுருப்பூங் கொங்கையினு மென்குங் குமங்கரையப்
பொன்னுருக்கு நீரிற் பொலிவிப்பார்—என்னிலத்து 91

வீழ்ந்த பணிமணியால் வெள்ளத் திளைப்பகலோ
ஞழ்ந்த குடகடலே யாக்குவி(ப்பார்) — ... 92

(த)ண்ணடு நீழலாற் றையலர்க்கெல் லாமயனோர்
கண்ணடி வைத்ததெனக் காட்(டுவார்) — ... 93

(கிரி)யளக மூழ்குங் கிளைத்தோகை யன்னச்
சுரியளக நீர்மிதப்பத் தோய்வா (ர்) — ... 94

(சுற்)றும் பளிங்கிடைதஞ் சோதியை நீராட்டு
மற்றிவ ராரென்று மனங் கொள்வ (ரார்) — ... 95

...விழுந் தாலுமத னீழலையு மின்னரி
னீரினும் வந்தார்கொல் நெடிதென்பார் — வேரி... 96

.. தோறுஞ் சிறந்த திருமகளி
ரவ்வனச நீராட் டகன்றனர் — இவ்வகையே 97

மெல்லியலார் ... ...
வல்லிபுன லாடி மகிழ்ந்தேறி — மெல்ல 98

நனைதுகில் நீத்து நறுந்துகில் சாற்றிப்
புனைவ ...... ...... ...... — கனையறுகாற் 99

புள்ளாடு செங்கமலப் பூவை யெனவொருத்தி
வெள்ளாடை தந் ... ... — ...ள்ளு 100

---

82—98 அருகிருந்தார் போற்ற அதிரூபவல்லி புனலாடுதல்.

98—100 கோலம் புனைதல்,

92-105 ஏட்டின் ஒரு பாதி ஒடிந்துபோனமையால் இப்பகுதி குறைவுபட்டுள்ளது. நிரப்புவதற்கு வேறு சுவடியும் கிட்டவில்லை.

மிமிழ்கலத் துக்கொங்கை யிரதியென வோர்பெண்
ணுமிழ்கலத் தைக்கை(யி னேந்து) — கூமழு 101

முருப்பசியு மேனகையு மொப்பா ரிருவர்
மருப்பதுமக் கைக்கவரி வாங்க — வ... 102

... ...லாரு மன்ன சதகோடி
வரம்பையில் மின்னார்முன் வாழ்த்தப் — பரம்பியப் 103

பாசடை ... ... .. றந்து
தேசடைய வந்த திருவென்ன — மாசிலாப் 104

பச்சை மணியுமுடைப் பற்பரா கப் (பீட)
(மிச்சித் தவளிரு)க்கு மெல்லிலக்கண் — விச்சைக்குள் 105

யாது பெரிதென் றிகுளையைப் பார்த்தந்த
மாது வினவுதலும் வாணுதலே — யாதவனார் 106

போயறியா தென்னும் புவியுண்டோ விச்சைக்குள்
நீயறியா தொன்றுண்டோ நேரிழையா — யாயினுங்கேள் 107

உண்ணமுதே யூணுக் குயர்வுகாண் பல்கலைக்குப்
பெண்ணமுதே கீதம் பெரிதுகாண் — தண்ணந் 108

திரைகரைய முன்னீர் திரைத்துண்டோன் செய்ய
வரைகரையச் செய்த வகைகாண் — அரவணையான் 109

றெட்ட கழையிசைப்பச் சோர்ந்த நிரையினமும்
பட்ட மரமும் பசித்ததுகாண் — முட்டரவக் 110

காலத்தி னுங்குடியாய்க் கண்ணுதலோன் றன்னிரண்டு
கோலச் செவியேற்றுக் கொண்டதுகாண் — சேல்விழியாய் 111

கீதச் சுவையலது கேட்கச் செவியுண்டோ
வேதச் சுவையில் விளைந்ததுகாண்—கோதையே 112

யென்று தொழுங்காலை யின்பரச வாணியெனத்
துன்று மொருவிறலி தோன்றினாள்—குன்றகலா 113

---

**100—103** பரிவார மகளிரின் உபசாரமும் வாழ்த்தும்.

**103—106** வித்தைகளுக்குள் பெரிது எது என அதிரூபவல்லி இகுளையை (தோழி) வினவுதல்.

**106—112** கலைகளுள் இசைக்கலையே பெரிது எனத் தோழி உரைத்தல்.

**112—113** விறலியொருத்தியின் வருகை.

மானே கலாப மயிலே மதனரசத்
தேனே மலர்க்கமலத் தெய்வமே — நானவகிற் 114

சூழ்வே யெனுமுபையத் தோளிற் பசுந்தொடியே
வாழ்வே யதிரூப வல்லியே — யேழுலகின் 115

மாத ருருவனைத்தும் வாங்கி யொளிதுளக்கி
வேதன் வகுத்ததுநின் மேனியே — மாதுபங்கற் 116

கின்று பெறக்காட்டு மிக்கோலங் காணுரே
யன்று மதனை யழியாரே — நன்றுநன்று 117

கண்ணேறு வாராமற் காக்க வுனையந்தப்
பெண்ணேறு பாகரெனப் பேசினுள் — ஒண்ணுதலு 118

மைநீட் டியகண் மலரா லருகழைத்துக்
கைநீட்டி யோரிடங் காட்டினுள் — வைகாட்டும் 119

வெய்யவயிற் கண்ணுள் வியனே வியப்படத்துச்
செய்யபுறப் பச்சை நிறந்தெரிந்து — துய்ய 120

பசும்பொன் னுருக்கென்னப் பன்னரம்பு செந்தே
னசும்ப லெனமிடற்றே டார்த்து — விசிந்து 121

வலித்து நெகிழ்த்து வலிக்கட் டுறுத்தி
யொலித்துப் பதங்கையா லோர்ந்து — நலத்தகுபொற் 122

பத்தல் கவியப் பணைமருப்பு மீதோங்க
முத்து முலையின் முகட்டணைத்துக் — கைத்துணையாற் 123

றைவர லோர்த்துத் தவழ லுருட்டுமுதல்
மெய்வர லெல்லா விதத்தாலு — மொய்வீணை 124

வாசித் தணிவிரலு மாணிக்கப் பூண்மிடறு
நேசித் தொருமித்து நின்றார்ப்பக் — கேசரமுங் 125

கின்னரமும் வீழக் கிளைக்கின் னரர்தமது
கின்னரமும் வீழ்த்திக் கிலேசிப்ப — மின்னிசையா 126

---

113—118 விறலியின் புகழுரை.

118—119 அதிரூபவல்லி அவளுக்கு இருக்கை தரல்.

119—128 விறலி வீணையிசைத்துப் பாடுதல்.

லோவியமு மாவிபெற வுள்ளாவி பெற்றதென
லாமோ வியமாக வுலகிருப்பக் — காவிற் 127

றருவு நெகிழ்த்தசேலந் தண்மணமாய் நிற்பப்
பருவ மடந்தை பரிந்து — தரமமைத்துப் 128

போது மிசையாற் பொருப்பை யுருக்கிநில
மீது சுமையாற்ற வேண்டினையோ — வோதிமமே 129

காந்திருவ தத்தையார் கற்றையாழ்.வெல்வதற்குப்
பூந்திருநீ யன்றுவந்தாற் போதாதோ — வாய்ந்ததொரு 130

மட்டு முதையனெதிர் வந்தக்கால் மால்யானை
யெட்டு முனதியாழ்க் கெய்தாதோ — கட்டுரைப்பின் 131

உன்னைப்போல் வார்பெருமை யோர்நா வுடன்பிறந்த
வென்னைப்போல் வாருக் கெளிதாமோ — வின்னிசையாற் 132

காதமுத முண்டதாற் கண்ணமுது முண்டதுநின்
சீத முலையார்த்தார்ச் சேயிழையாய் — மாதவத்தால் 133

வந்ததோ விந்திரனு மாலுங் குபேரனுமே
தந்ததோ காமன் தரித்ததோ — உந்திவயிற் 134

றொத்த வடமயிலே யுன்பா லேவரிந்த
முத்து வடமீந்தார் மொழிகென்ன — அத்தோகை 135

ஆயிற் சொலக்கே ளதிருப வல்லியென
வாயிற் கிளவி வழங்கினள் — கோய்முகடே 136

சூழ்கொண்ட லின்தரளச் சோதியாய் வெண்மதியைக்
கேழ்கொண்ட கொல்லிக் கிரியினன் — யாழ்முதலா 137

---

*128—134* அதிருபவல்லி விறலியைப் புகழ்தல்.

*134—135* விறலியை நோக்கி நீ அணிந்துள்ள முத்துமாலை தந்தார் யார் என வல்லி வினவுதல்.

*135—227* விறலி தனக்கு முத்துவடப் பரிசு தந்த செழியதரையனின் சிறப்புரைத்தல்.

*136—157* செழியதரையனின் தசாங்கம் எடுத்துரைத்தல்.

*136—140* கொல்லிக்கிரி, பாரிப்பொருப்பு, பச்சைமலை.

மைங்கருவிக் கொப்ப வகவுமயி லாடலுக்குப்
பொங்கருவிப் பாரிப் பொருப்பினுன் — சிங்கத்துப் 138

பேரமலேக் கஞ்சிப் பிளிறுங் களிறுகளுஞ்
சேரன்மலே யம்போற் சிகரத்தான் — வேரிமலர்த் 139

தேனரம்பை யார்க்குஞ் செறிகளபக் காடுதொறும்
வானரம்பாய் பச்சை வரையினுன் — நானமூ 140

வாவா றடிகறங்க வூறுமத மாருநி-
வாவா றுடைய நெடுமால் — சிவாகமத்துச் 141

சாற்றும் பெருந்தீர்த்தந் தாழ்வார் பவந்தீர்த்தங்
காற்றுந் திருமணிமுத் தாற்றினுன் — போற்றிரண்டு 142

மாகதிருஞ் செந்நெல் வயற்கதிரும் நின்றுபோர்
நாகதிருந் தென்மகதை நாட்டினுன் — மேகம் 143

நறுச்சித் திரமாட நற்குடியார் கல்லேக்
குறிச்சிப் பெரும்பத்தில் கோமான் — துறைக்கயத்து 144

வாளே குதிப்ப வழிதோறும் பூகமடிப்
பாளே முருகுயிர்க்கும் பாலேயான் — வாளொதுங்குஞ் 145

சோலேத் திரளன்னஞ் சும்மைக் கருங்கவரிப்
பாலேப் பருகுதிருப் பாலேயான் — மேலிட்ட 146

வம்பொற்பூண் கொங்கையா ராடவரோ டூடியெறி
செம்பொற்பூண் காலுறுத்துஞ் சேலத்தான் — கொம்பனேயார் 147

மாரூ வியமொளிக்கு மாணிக்க மாளிகையின்
சீரோ வியனடிக்குஞ் சேலத்தான் — வீரூதம் 148

வாங்கு திகிரி வரையிற் பெரிதென்ன
வோங்கு புரிசை யுலகையான் — ஈங்கனேத்தும் 149

---

140—141 நிவா ஆறு.
141—142 மணிமுத்தாறு.
142—143 மகதை நாடு.
143—144 கல்லேக்குறிச்சி (ஊர்).
144—146 பாலேப்பதி.
146—148 சேலம்.
148—151 உலகை (ஊர்).

பெற்ற தலைமைப் பெரியவ ளோர்பாகத்
துற்றபிரான் வைகு முலகையான் — பெற்றத்தான் 150

பூசை யியமியமாம் பூதலமா ரேழினும்போ
யோசை யதிரு முலகையான் — பாசிழையார் 151

சங்குவளை மாலைகொடுத் தாகமா லைக்கொடுக்குஞ்
செங்குவளை மாலைத் திருமார்பன் — பொங்கிருளை 152

மேயுங் கதிர்ப்பரியின் மீது குரம்புதையப்
பாயுங் கவனப் பரியினான் — றூய்மருப்பு 153

முத்த கரட முரல்வண்டு மண்டுபெரு
மத்த தடவிகட வாரணத்தான் — ஒத்துப் 154

படிவணங்கு மெல்லையின்கட் பாய்புலிமீன் வில்லின்
கொடிவணங்கு மேழிக் கொடியான் — கடவுளர்போய்க் 155

குன்றிற் கடையக் குமிறுங் கடலடக்கு
முன்றிற் கடைமும் முரசினான் — யென்றென்றும் 156

அர்த்தனா ரீசனா ரம்பொன் பரப்பினார்
நித்தனா ராணை நிலமையான் — யெத்திசைக்கு 157

மாரியராய் மிக்கா ரமுதத் தமிழ்மாலைச்
சீரிய ராய செழியனையு — மாரியுடன் 158

மாகத் தருவெருவ மாழை மழைபொழிந்த
தியாகப் பிரமன் செழியனையு — மாகலியின் 159

---

151—152 செங்குவளைமாலை.

152—153 பரி (குதிரை).

153—154 வாரணம் (யானை).

154—155 கொடி.

155—156 முரசு.

156—157 ஆணை.

157—160 முந்தையர்.

157—158 தமிழ்மாலைச் செழியன்.

158—159 தியாகப்பிரமன் செழியன்.

நொந்தயரா வண்ணம் நுவலு முலகளித்த
முந்தயராய்ப் பெற்ற முதன்மையான் — சந்ததமு 160

மற்ருரு மொவ்வாத வள்ளலிரு பத்திரண்டாஞ்
சிற்ருஞ் செழியனெனுஞ் செல்வனுக்குந் — துற்றபுகழ்க் 161

காரனைய செங்கைத் திருவேங் கடவனுக்கும்
பேரனென வந்த பிரபுராயன் — பார்மன்னர் 162

மூவரும் வள்ளலொரு மூவெழுவ ருமுதலாம்
யாவருங் காவ லிகழ்ந்ததற்பின் — பாவலரும் 163

முத்தமிழும் பல்கலையும் மொய்கலியின் மூழ்காம
லொத்த பெருவாழ் வுதவினேன் — தத்தந் 164

தடமரபின் முற்பிறந்தார் தாங்குகிளை தாங்க
வடமரம தென்றியம்ப வந்தோன் — தடைய 165

நிலம்விளங்கத் தோன்றுமிரு ணீக்குஞ் செழியன்
குலம்விளங்கத் தோன்றுங் குமாரன் — கலுழிப் 166

பொருகண்ண மால்யானைப் பூலோக நாதன்
மருக னெனச்சிறந்த மன்னன் — இருநிலத்து 167

முன்னந் தனது முதல்வர் செயும்புகழைப்
பின்னும் பெருகப் பெருக்கினேன் — ஒன்னலரைக் 168

---

159–162 சிற்ருஞ்செழியனுக்கும் திருவேங்கடவனுக்கும் பேரன்.

162—163 மூவேந்தர்—வள்ளல் இருபத்தொருவர்—பின்வந்து பெருவாழ்வு உதவியவன்.

163—164 முத்தமிழும் பல்கலையும் பெருவாழ்வு பெற உதவியவன்.

164—165 சுற்றம் தாங்கல்.

165—166 செழியன் குலம் விளங்கத் தோன்றும் குமாரன்.

166—167 பூலோகநாதன் மருகன்.

167—168 முன்னேர் புகழை மேலும் பெருக்கினன்.

168–173 மெய்க்கும் பெருமாள், சூரப்பவாணன், தேவேந்திரன் தாகம் தீர்த்தான் ஆகியோரின் தமையன்.

கைகொண்ட வேலாற் களைந்து தமிழ்வளரப்
பெய்கொண்டல் மெய்க்கும் பெருமாளு — மொய்கலனும் 169

வாளுங் கவசமு மன்றுயிருந் தன்னிரண்டு
தோளுந் துணையுந் துணைவிழியும் — நாளுமிகச் 170

சேந்தபிரா னெந்துயரந் தீர்த்தா னெனுநாமம்
வாய்ந்தபிரான் சூரப்ப வாணனுந் — தேர்ந்துகவி 171

நாவேந் திரவோற்கும் நல்கும் நரலோகந்
தேவேந் திரன்தாகந் தீர்த்தானும் — பூவே 172

ஏமைய வளந்த வருந்தருமங் கீர்த்தித்
தமைய ரெனவுதித்த தக்கோன் — அமலன் 173

நடந்தய வுள்ள நயந்துதொழு மன்பன்
மடந்தைய ரின்ப மதனன் — கடைந்த 174

மதுர வமுத வசன னபாயன்
சதுர விசைய சயந்தன் — முதுதமிழை 175

ஆராயுந் தொன்னூற் ககத்தியனென் னுஞ்செழியன்
தீரா வினைதீர்த்த செல்வனையும் — பாரன் 176

பொருந்தாக நீலமலர்ப் பூந்தாமன் பூமான்
தருந்தாகந் தீர்த்தான் றனையும் — பெருந்தரையைப் 177

பூத்த கருணை பொழியும் விழிகொண்டு
காத்த திருவேங் கடவனையுங் — கோத்திரத்தில் 178

---

168—169 மெய்க்கும்பெருமாள்.

169—171 சூரப்பவாணன்.

171—172 தேவேந்திரன் தாகம் தீர்த்தான்.

173—174 அன்பன், மதனன்.

174—175 அமுதவசனன், நபாயன், சயந்தன்.

175—180 குமரர்கள் நால்வர்.

175—176 வினைதீர்த்த செல்வன்.

176—177 தாகந்தீர்த்தான்.

177—178 திருவேங்கடவன்.

ஏய திலக னிருணீக் கினபெருமா
ளாய செழியற் கதிபனையுந் — தாயச் 179

சமர முகத்துத் தனஞ்செயனுக் கொக்குங்
குமர னெனப்படைத்த கோமான் — அமுதகுணன் 180

பூமையத் துளபப் புயத்தா னுலகுடையான்
மாமைத்துன நாம வரராமன் — காமிப்ப 181

வந்நா ளுமைக்கீந்த வத்தனு ரீசருமே
யிந்நா ளிவன்காணக் கீந்ததெனப் — பன்னும் 182

புல்கிய நம்பெரிய நாயகிக்குப் பொற்பாகம்
நல்கியநம் பொன்பரப்பு நாதற்குத் — தொல்கண்ண 183

சாயகற்குத் தென்னுலகைச் சங்கரற்கு நால்வேத
நாயகற்குப் பொன்பரப்பு நாதற்குச் — சேயதிருக் 184

கோபுரமு மாமதிளுங் கோயிலு மண்டபமு
மாபுரமுந் தேரு மணிமறுகுந் — தீபமும் 185

நந்தா வனமும் நளினத் திருக்குளமும்
கந்தா வளகக் கணிகையரும் — நந்தா 186

விழாவுஞ் சிறப்பும் விமானமும் செம்பொற்
குழாமும் பிறவுங் கொடுத்து — வழாமொழியுஞ் 187

சீருத் திருமுகமுஞ் செந்தமிழுஞ் சந்ததியு
மாருப் பெருவாழ்வு வாங்கினேன் — தேறிப் 188

பகர வரிய பழையமறை வாணற்
ககர நிலமை யளித்தோன் — புகரகலப் 189

பேணி யியம்பும் பெருநூற் கவிஞருக்குக்
காணி யெனப்பலவூர் கற்பித்தோன் — மாணிக்க 190

மாலையும் வெங்கரியும் வாம்பரியுஞ் செங்கனகச்
சேலையும் வந்ததமிழ்க் கீந்தோ — னூலிற் 191

---

178—179 இருள் நீக்கின பெருமாள்.

179—188 பெரியநாயகி—பொன்பரப்புநாதர் வழிபாடும் திருப்பணியும்.

188—189 மறையவர்க்கு அகரம் அமைத்தல்.

189—194 கவிஞர்க்குக் காணி கொடுத்தலும் பரிசு பல வழங்கலும்.

குயின்ற தமிழ்க்குக் குறுமுனியு மன்னுன்
அயின்ற கடலு மனையான் — இயன்ற 192

பரிசில் வரிசை பலதெரிந்து நல்கும்
குரிசில் விசைய குபேரன் — கிரிசை 193

வனசத் திருக்கை மலர்சட் டுவமா
மனசத் திரசோம னன்னுன் — முனியி 194

ணரணடையக் கைக்கொண் டடைந்தார் தனது
சரணடையத் தந்த தகவோன் — முரணடைந்து 195

விற்பிடித்து வேல்பிடித்து வீரம் பிடித்தெதிர்த்தார்
புற்பிடிக்க வாள்பிடித்த போராளன் — தற்கம் 196

படைகண்ட சேவகனோர் பற்று ரரசர்கடை
நடைகண்ட காலமுத நல்லோன் — படைமன்னர் 197

தண்டு கவிகைகொடி தந்தி பரிகவரி
மண்டி முடிநெருங்கும் வாசலான் — கொண்ட 198

லொழிந்தாலும் வேதமொரு நான்கும் பொய்யே
மொழிந்தாலும் பொய்யா மொழியான் — றெழுங்கை 199

யுழையவரைக் கற்றவரை யுற்றவரை மற்றும்
பழையவரைப் பண்பகலாப் பண்பன் — முழுதுந்தன் 200

கொற்றந் துலங்கக் கொடைதுலங்கத் தன்னுடைய
சுற்றந் துலங்கத் துலங்கினோன் — முற்றும் 201

வழுதி கிரியும் வடகிரியு மேழி
எழுதி மரபுநிலை யிட்டோன் — பழசைநகர் 202

---

*194—195* பகைத்திறம் அழித்தல்.

*195—196* பேராண்மை.

*196—198* வாசல்.

*198—199* பொய்யாமொழியான்.

*199—200* கற்றவரை உற்றவரை நயத்தல்.

*200—201* கொற்றமும் கொடையும் துலங்குதல்.

*200—202* கிரியில் மரபுநிலை பொறித்தவன்.

துன்னிய நீலி துடரும் பழிகழுவி
வன்னியை நீராக்கும் வாய்மையான் — முன்னங் 203

கரகமல நீட்டிக் கவிஞற் குதவ
வுரக மணிகொண்ட வுரவோன் — பரமன் 204

வளைவாரி நஞ்சுண்ட வாய்க்கன் றமுது
மூளைவாரி யிட்ட முதலோன் — வளமாறன் 205

சோதிப்பச் சூன்முதுகிற் சூடு மடிசிலை
யாதிப் பருவத் தருளினோன் — மீதில் 206

உறையிட்ட கற்குக் கொருபிணை யிட்டன்று
சிறைவிட் டகல்வித்த சேயோன் — முறைமைபுரி 207

மூவேந் தரையு முனிந்து தளைப்படுத்திப்
பாவேந்த ரென்னப் பணிகொண்டோன் — பூவா 208

னதிர வழுதியைவென் றன்றொரு பாணற்கு
மதுரை யரசளித்த மன்னன் — முதுசீர்க் 209

கெழுகலிங்கத் துப்பரணிக் கெல்லையிது வென்ன
வெழுகலிங்க முங்கொண் டெழுந்தோன் — முழுது 210

மருப்பி லெடுத்து வலையம் புயமாம்
பொருப்பி லெடுத்துப் புரந்து — விருப்பி 211

லொருமா னடிதுடர்ந்த வுத்தம னீங்காப்
பெருமா னிலமடந்தை பெம்மான் — கிரிபயந்த 212

---

202—203 வாய்மை.

203—204 கவிஞருக்கு உதவ நாகமணி கொண்டது.

204—205 பரமனுக்கு அமுது படைத்தல்.

205—206 அடிசில் அருளியது.

206—207 கற்குச் சிறைவீடு அளித்தது.

207—208 மூவேந்தரைப் பணி கொண்டது.

208—209 வழுதியை வென்று பாணனுக்கு மதுரை அரசு அளித்தது.

209—210 எழுகலிங்கமும் கொண்டது.

210—212 உலகைப் புரந்தது.

பேதை யிடப்பாகப் பெம்மான் சடைமகுடக்
கோதைக் கடவுட் குலத்தினேன் — ஓதி 213

உவக்கின்ற பாவோர்க் குதவியிரு செங்கை
செவக்கின்ற வந்தாலந் தீர்த்தா — னிவக்குந் 214

தவனேயன் றெய்வத் தவனேயன் முக்கட்
சிவனேய னந்தாலந் தீர்த்தான் — கவினு 215

மிசைகாத் தியல்காத் திருநிலத்தோ டெட்டுத்
திசைகாத்த வந்தாலந் தீர்த்தான் — சசியும் 216

பொருப்பா தவனும் புறத்தே ழினுஞ்சொற்
றிருப்பாத வந்தாலந் தீர்த்தான் — உருத்துக் 217

கறைகொண்ட வேலினன் கன்னிகங்கை மட்டுந்
திறைகொண்ட வந்தாலந் தீர்த்தான் — நிறையு 218

மருவளருங் கல்லார மார்பத்துச் செல்வத்
திருவளரு மந்தாலந் தீர்த்தான் — புரிகுழலே 219

தந்தவட மிந்தத் தரளவட மிவ்வடத்துக்
கந்தவட மேருவுநே ரல்லகாண் — இந்திரனூர் 220

பொன்னகர முங்கடவுட் புட்பகவூர் திப்பெருமான்
நன்னகர மும்விலைக்கு நண்ணுங்காண் — பொன்னகரத் 221

தந்த மணியு மழகு தரம்பார்க்கி
லிந்த மணியோ டிணையலகாண் — பைந்தொடியே 222

சங்க நிதியுந் தரும்பற்ப மாநிதியுந்
துங்க விலையிதற்குத் தோற்குங்காண் — மங்கைநல்லாய் 223

கண்ட விலையே கருதிற் பதினெட்டு
மண்டலமுஞ் சூறைகொள்ள வல்லதுகாண் — புண்டரிகத் 224

தூடு முகமடவா ரொண்கடகப் பல்கொடி
யாடு மவன்மார்பி லாரங்காண் — நீடமர்க்குத் 225

---

212—213 கங்கை குலத்தான்.

213—219 அந்தாலந்தீர்த்தான்.

219—227 தாலந்தீர்த்தான் தந்த தரளவடச் (முத்துமாலை) சிறப்புக் கூறுதல்.

தேங்காச் செருமான் திருத்தோ ளினங்கழையே
நீங்காப் புயவரையி னித்திலங்காண் — ஈங்குப் 226

புதிய குளிர்வும் பொலிவு மலிவு
மதியு மொதுங்க வருங்கா — ணிதநலமென் 227

றன்ன விறலி யறையுங்கால் மாணிக்க
மின்ன வெழுங்கனக மேகலையும் — பொன்னவிருஞ் 228

சேலையு மேகலையுந் தோள்வயிரக் காறையும்பொன்
ஞேலையுங் கிண்கிணியு மொண்சிலம்புஞ் — சாலவு 229

மீதலு மன்னு ளிறைஞ்சி விடைகொண்டாள்
போதலு மக்கண்டும் பூங்கொடியுங் — காத 230

லவனது கொண்டா ளதிராழி யேழின்
கவன துரகன் கரந்தான் — றிவளுஞ் 231

சிவந்தபடத் தண்டந் திரைவளைத்த தென்ன
நிவந்தபடச் செக்கர் நிகர்ப்ப — வுவந்த 232

தடம்பொய்கை வண்டுறங்கத் தண்மலர்கா வெல்லாங்
குடம்பை தொறும்புட் குழம்பப் — படர்ந்து 233

பனிமாலை தோன்றுதலும் பைந்தொடிமார் நத்தத்
தனிமாலை யுற்றுளைத் தாங்கி — யினிமுத்த 234

மாளிகையிற் போதுவோம் வாவென் றெழுந்தேகிச்
சூளிகையிற் புக்கருகு சூழ்ந்திருப்ப — வாள்விழிமுன் 235

செவ்வான் வடிவந் திரள்மீ னவவனப்பூண்
வெவ்வா னிலவு விழுத்தாம — லெவ்வாயும் 236

---

228—230 விறலிக்குப் பரிசு தருதல்.

230 விறலி விடைபெற்றுப் போதல்,

230—231 தாலந்தீர்த்தான் சிறப்பும் புகழும் கேட்ட அதிரூபவல்லி அவன்மேல் காதல் கொள்ளுதல்

231—234 மாலைப்பொழுதின் தோற்றமும் மங்கையின் மயக்கமும்.

234—235 மயக்கமுற்றுளை முத்தமாளிகைக்குக் கொண்டு சென்று, பாங்கியர் அவளைச் சுற்றியிருத்தல்

235—240 அந்திமாலையின் வருகை.

வீசு மிளந்தென்றல் மெய்ப்பூ ணரவுயிர்ப்பு
மூசு கடல்வாய் முழங்குதுடிப் — பூசல் 237

வசந்தன் மிடற்றுவிட மாறுபெறச் சேவி
னசைந்தமணி யெற்று மணியார்ப்புப் — பசும்போதின் 238

வாளி திரிசூலி மாவிற் குயிலன்றில்
கூளி பெருந்தொகுதி கொள்ளோசை — நீளத் 239

திருத்துமிரு வாரணத்தோல் சேர்ந்தந்தி நந்த
வுருத்திரனைப் போல்வந் துறலும் — வருத்த 240

மிகுந்து மயங்கி வியந்துருகித் துன்பம்
புகுந்து யுலர்ந்துயிர்க்கும் போது — திகழ்ந்த 241

தளிரு மலர்களும்பைந் தாதுங் கொணர்ந்து
குளிர வகுத்தமளி கோலி — யொளித்த 242

தெளிவொண் பனிநீருஞ் செஞ்சாந்து மாடிக்
கிளியின் மொழியைக் கிடத்தி — யொளியிழையுட் 243

காமக் கனலால் கருகுஞ் சருகாகித்
தாமத் தளிரமளி சாம்புதலும் — பூமடந்தை 244

யாற்று தலம்வந் தயர்வாளை வாள்விழியார்
மாற்று தெடுத்தணைத்து மார்பணைப்பப் — போற்றி 245

யணைக்குந்தம் மங்க மழற்படுபூங் கொம்பிற்
பணைக்கும் பசுஞ்சூடு பார்த்தார் — மணிப்பளிங்கு 246

வேய்ந்ததொரு மண்டபத்து வெண்ணிலாச் சிந்துமிந்துக்
காந்த வமுதக் கதிர்மேடைப் — பூந்தண் 247

---

240—241 வருத்த மிகுதியால் அதிரூபவல்லி நெட்டுயிர்த்தல்.

241—243 அதிரூபவல்லியைக் குளிர்ச்சியான படுக்கையில் கிடத்துதல்.

243—244 காமக்கனலால் அவள் கருகும் சருகுப்போலத் துன்புறுதல்.

244—246 அதுகண்ட பாங்கிமார் அவளைப் பாங்காக எடுத்துத் தம் மார்பில் அணைக்க, அவள் மேனி தீப்பட்ட பூங்கொடி போலச் சூடுபட்டிருத்தலை அறிதல்.

அரம்பைக் குருத்தி லடுக்க லடக்கிப்
பரம்பப் புனைந்தமலர்ப் பாயில் — பெருந்திருவை 248

வைத்துப் பனிநீர் வழியநறுஞ் சாந்தாட்டி
முத்துத் தொடையல் முலைசூட்டி — யெத்திசையு 249

மேலவட்ட வார்குழலா ரீரப் பனிநீர்தோய்த்
தாலவட்டம் வீசி யயல்நின்றார் — சாலப் 250

பரிகரிப்ப தெல்லாம் பகைத்துத் திகைத்து
விரிகரித்து ஊணந்து வெயர்த்தாள் — இருதனத்திற் 251

பாய்ந்த பனிநீர் படுமுலையிற் காயிரும்பு
தோய்ந்தபனி நீராய்ச் சுவறினள் — சாய்ந்தவிலின் 252

வெம்புழுக்கங் கஞ்சன் மெழுகெடுத்த தோர்வடிவிற்
செம்புருக்கி விட்டதெனத் தேம்பினள் — கொம்பனையாள் 253

துங்க முலைத்தரளத் தூள்வெடிப்ப வங்கிருந்தார்
அங்கமெலாங் கொப்பளங்க ளாக்கினள் — திங்கட் 254

கதிர்முகத்தா லாலவட்டங் கைவீசுந் தோறு
முதிர விரகத்தீ மூண்டாள் — எதிரிலாப் 255

பெண்ணீர் மொழியீர் பிறைவடிவை யானதலால்
கண்ணீர்க் கடலெனக்குக் காயாதோ — வண்ணமதன் 256

மேவியகூத் தானதலால் மென்முளரி வாளிதரு
மாவிகலந் துண்ண வறியானோ — மேவுதென்றல் 257

நஞ்சுவண மானதலால் நானென்றும் பொன்னிறத்து
மிஞ்சுவணம் பார்த்தக்கால் மீளாதோ — மஞ்சளவு 258

---

- 246—250 காமக்கனலால் வருந்திய அவளைப் பளிங்குமணி வேய்ந்த மண்டபத்திற்குக் கொண்டுபோய்ச் சந்திர காந்தக் கல்லாலான மேடையில் வாழைக்குருத்தில் மெல்லிய மலர் பரப்பிப் படுக்கவைத்து, பனிநீர் சிந்திச் சந்தனம் பூசி, விசிறியால் வீசிக்கொண்டு பக்கத்தில் நிற்றல்.
- 250—255 சேடியர் செய்த பரிகாரம் பயன்படாதுபோக அதிரூப வல்லி விரகத்தீ மூள நிற்றல்.
- 255—267 துயரால் அவள் சேடியரைநோக்கிப் பலபல பேசிப் பெரிதும் வருந்துதல்.

மூசு திரையரவ மூண்டெழுந்த தன்றியெதிர்
வீசு மிளவாடை விழுங்காதோ — பாசிழையீர் 259

காரிகையீ ரென்னுட் கரிவ னெடியமால்
வாரி சுவறுவிக்க மாட்டாதோ — தூர்த்தென் 260

காது சுடுஞ்சூடு கண்டாலிவ் வேய்ங்குழலை
யூதுமித மென்படுமோ வோதீரே — மாதுநல்லீர் 261

கோளா யவன்றிற் குயில்முழக்க மென்செவிக்குக்
கேளாவூ ரொன்று கிடையாதோ — வாளிரவி 262

வான்விழுங்கு முன்னீர் மகரந் திமிங்கிலமா
மீன்விழுங்கித் தோவிருளின் மீளாதோ — தேன்மொழியீ 263

ரென்று புலம்பு மெழும்விழும் வெய்துயிர்க்கு
மொன்று முயிர்ப்பிலள்போ லுள்ளடங்கும் — அன்றித் 264

தளரு மலங்குந் தாகிக்கு மெங்கும்
விளரு மழுதழுது விம்மும் — வளைநெகிழும் 265

நாணழியுந் தூசொழியும் நல்லறிவு பேதிக்கும்
பூனொழியு மேனி புலர்ந்தயரு — மூனொழியு 266

மிவ்வழியே நைவாளுக் கென்செய்வோ மென்றிகுளை
மைவிழிவேற் கண்ணீர் வழித்தெறிந்து — கைவயிறு 267

வைத்து நெரித்து மறுகி யுளங்கலங்கிப்
புத்தி தளரும் பொழுதின்கண் — சுத்தச் 268

செழியனையண் டார்புகழ்போற் றேய்ந்து பலமீனி
னுழியொளிக்க ளெல்லா மொளிப்ப — விழைவி 269

னவனை யடைந்தா ரணிவதனம் போலப்
புவன வனசம் பொலிய — நவைதீரு 270

மன்னா னுடைய வடவாய்த் திசைத்திகிரிப்
பொன்னார் வரையைப் புறஞ்சூழ்ந்து — மின்னோடு 271

வந்த தெனவுதைய மால்வரையின் மீதுகிளர்
சுந்தரப்பொற் றேரிரவி தோன்றுதலுஞ் — சிந்தைதளர் 272

---

267—268 இகுளையர் இவ்வாறு துன்புறுவாளுக்கு நாம் என் செய்வோம் என்று புத்தி தளர்தல்.

268—272 அச்சமயம் காலைக்கதிரவன் தோன்றுதல்.

பெண்ணமுத மென்னப் பிறங்கு மிளங்கொடியைப்
பண்ணின் மொழியார் பரிந்தெடுத்துத் — தண்ணுறுநீ 273

ராட்டிக் கலவை யணிந்து பலகலனும்
பூட்டி யருகிருந்து போற்றுதலும் — வேட்டாங் 274

கொருத்தி குறத்தியுட னெய்ததார்க் கோதை
யருத்தி தழைத்தாங் கழைத்துக் — கருத்திற் 275

கருதல்லம் வந்ததெது காரணத்தா லென்ன
வொருதலத்தை நீதொடுகென் றேதத் — திருவுந்தன் 276

முத்து வடந்தொடலு முத்து வடனிமித்த
மித்துணையு வந்த திலங்கிழையாய் — சித்தமயல் 277

தீர்குவைநீ யின்றுமனஞ் சிந்தித்தான் றன்பவனி
பார்வை குளிரும் படிதொழுவை — தார்கொணர்ந்து 278

தோழியும் நல்குந் துணைவ னணைந்துநீ
வாழி யெனவிருந்து வாழ்த்துங்கால் — வாழிச் 279

செழியன் வளர்த்தெடுத்த தென்னூல் வளர்க்குஞ்
செழியனெனு மந்தாலந் தீர்த்தான் — இழைபொன் 280

நகையு மணிவெயிலும் நான வகிலும்
புகையும் விளக்கும் பொலிந்து — தொகுபூம் 281

படங்கட்டுப் பொன்னறையிற் பைம்போ தமளித்
தடங்கட் டுயிலுணர்ச்சி தந்து — குடங்கமழ்வித் 282

---

272—274 அதிருபவல்லியை நீராட்டிக் கோலம் புனைந்து சேடியர் போற்றுதல்.

274—276 குறத்தியொருத்தி வர, அவளை அழைத்துத் துன்பம் வந்தவகை வினவுதல்.

276—277 குறத்தி. 'நீ ஒன்றைத் தொடுக' என்னத் திரு ஒத்த தலைவி முத்துவடம் தொடல்.

277—279 முத்துவடத்தால் வந்தது இந்நோய் எனக்குறத்தி மொழிதல். மேலும், அவள் நீ இன்று உன் மயக்கம் தீரப்பெறுவாய். உன் மனத்துள் கருதிய தலைவன் பவனி காண்பாய். அவன் மார்பிலணி மாலையைத் தோழி பெற்று வந்து நல்க, நீ அவனை அணைந்து வாழ்வாய் என்று சொல்லி வாழ்த்துதல்.

279 – 374 **காலந்தீர்த்த செழியனின் பவனியுலா.**

279—282 காலந்தீர்த்த செழியன் துயிலுணர்ந்து எழுதல்.

தேற்கும் புதுமஞ் சனமாடி யெப்பொருளு
மாற்குஞ் சுருதி யவற்கீந்து — நீற்கொழுந்து 283

தூவிய தூசு துறந்து மருங்குடுத்த
நீவிய திசையில் நிலாவெறிப்பத் — தாவா 284

வெயிலும் நிலவும் விரவுமணி முத்திற்
குயிலு மவுலிக் கொடுப்பச் — சயிலச் 285

சிகரத் துணையிணையிற் சேர்ந்தகதி ரென்ன
மகரக் குழைதோள் வருடத் — துகிரிற் 286

பயத்து வலையப் பரவைநிலந் தாங்கும்
புயத்து வலையம் பொலிய — நயத்திருவின் 287

கோலத்தார் மார்பத்தே கொண்மூவு மின்னுமென
நீலத்தா ராரத்தார் நின்றிலங்க — மேலே 288

தருப்பமுத்த தென்னத் தடங்கைக் கடங்கத்
திருப்பமுத்த வாளி திகழ — விருப்புதர 289

பந்தனமும் பொற்கச்சும் பைம்பொற் றுடிமடவார்
சிந்தனை யாவுந் திறைகவர — வந்தண் 290

கடிக்கமலம் சூழ்ந்து களியளியார்த் தென்ன
வடிக்கமலப் பொற்கழல்வா யார்ப்ப — வெடுத்தணியு 291

மண்டவப் பூணோன் வகுத்த படிகடவுட்
புண்டர வெண்ணீறு புறங்காப்ப — வெண்டிசைக்குஞ் 292

சந்து கலவை தழுவி மணங்கமழ
முந்து மனங்கன் முகனுண — வந்துலகை 293

அத்தனு ரீச ரருட்பெரிய நாயகிதாள்
சித்த ஞானத்தாற் றெரிசித்து — மொய்த்த 294

மதத்தால் வடவை யவித்து வயக்கடை
ககக்கால் வடவை விடுங்கைம்மா — ஞாலஞ்சூழ் 295

---

282—293 நீராடித் தானம் செய்து செழியன் கோலம் பூணுதல்.

293—294 அர்த்தனுரீசர் - பெரியநாயகியரைச் சிந்தையில் நினைந்து தொழுதல்.

294—304 பட்டத்து யானையின் சிறப்பு.

மாவிலா ழிக்கடலே மண்ணகழ்ந்து தூர்த்துத்தன்
ருவிலா ழிக்கடலே தந்தமா — மேவு 296

மெயிற்று நிலவா லிருளோட்டி யாகங்
குயிற்று மிருள்விளைக்குங் கூற்றம் — புயத்திளைக்கு 297

மோங்கு துவசத் தொளிமறைத்துக் கிம்புரிப்பூண்
வீங்கி வெயில்பரப்பும் வெல்வேழம் — ஞாங்கர் 298

மணியா லிடிநுடங்க மாய்த்துப் பிளிறும்
பணியா லிடிகொடுக்கும் பாய்மா — வணிபுழைக்கைக் 299

காற்ரு னுலகாற்று மாற்றுவிக்க வீழ்காற்றிற்
காற்ரு லுலகாற்றுங் கார்மேகங் — காற்றளையிற் 300

கட்டுந் துடருங் கார்க்கக் கடங்குவடுக்
கட்டும்மா வீய்க்குங் கார்க்களிறு — நெட்டுடலாற் 301

ருன்மேரு வன்றித் தனக்கெதிரோன் ருவென்று
மாமேரு வும்பெயர்க்கு மாதங்க — மேனடு 302

கன்ன டகந்துரந்து கங்கைத் தரைமுருக்கித்
தென்னடர் தங்கள் சிரநெரித்துத் — துன்னத 303

கொங்கந் துகைத்துக் குகிர மெரிவித்து
வங்கந் துகள்படுத்து மால்யானை — இங்குப் 304

பொருத்தம் புகாமன்னர் பொன்முடியிற் கால்வைத்
தெருத்தங் கவடசைய வேறி — விரித்த 305

கவிகை கவித்த கவினிலவால் மன்னர்
கவிகை மலர்க்கமலங் காப்ப — வவிர்கின்ற 306

தேமரைமீ தன்னஞ் சிறைப்படிக்கொண் டன்னமின்னர்
காமருபூங் கைக்கவரிக் காலசைப்ப — மீமிசையி 307

---

295 இக் கண்ணியில் வரும் 'ஞாலஞ்சூழ்' என்னும் தனிச் சொல், 'மதத்தால்' எனத் தொடங்கும் முன்னடிக்கு ஏற்புடைத்தாயில்லை. இங்கே ஒரு கண்ணியை ஏடு பெயர்த்தெழுதியோர் விடுத்தனரோ என்னும் ஐயம் தோன்றுகிறது.

304—305 செழியன் யானைமீது ஏறுதல்.

305—307 மகளிர் கவரி வீசுதல்.

லண்ட மளவு மகிலமெலாந் தன்னிழலாற்
கொண்டபெரு மேழிக் கொடியோங்க — மண்டலஞ்சூ 308

ழாழி மடுக்க ளடைத்துத் துகள்மூட
வாழி யெனக்கலைஞர் வாழ்த்தெடுப்பத் — தாழாக் 309

கரிமாக் கடலுமிகு காலாட் கடலும்
பரிமாக் கடலும் பரவ — விருபுறமும் 310

போந்து தொழுநிருபர் பொன்முடிக ளொன்றொடொன்று
தேய்ந்த பசும்பொன் தெருநிரப்ப — போந்துவரி 311

விற்குழுவும் வாட்குழுவும் வேற்குழுவும் பல்கோடி
முற்குழுமி யெம்மருங்கு மொய்த்தீண்ட — வற்கத்துப் 312

பேரி திமிலம் பிறப்ப வலம்புரியும்
மூரிக் கடல்முரசு முன்முழங்கத் — தாரை 313

முழாம்பதலை கல்லைவட மொந்தை தடாரிக்
குழாம்பணையும் யாழுங் குமிறக் — தொழாப்பேர் 314

புலரத் தெரிவையரும் பொன்மறுகுஞ் செவ்வி
மலரப் பவனி வரலும் — புலவர் 315

முழுவாய்த் தமிழறியு மூதறிஞன் வந்தான்
வழுவாத் திருமொழியன் வந்தான் — பழமை 316

யுரைசெய் கவிக்கு முதவுபிரான் வந்தான்
வரிசைக் கொருகுருசில் வந்தான் — பரம 317

நடநாட் டிதைய நளினேயன் வந்தான்
வடநாட் டொருசெழியன் வந்தான் — படியில் 318

---

*307—308* மேழிக்கொடி உயர்ந்து பறந்து விளங்குதல்.

*308—309* கவிஞர் வாழ்த்துதல்.

*309—310* யானை, காலாள், குதிரைப் படைகள் பரவுதல்.

*310—311* இருபாலும் நெருங்கி வந்து தொழும் மன்னர்.

*311—312* வில்லோர், வாளோர் முதலிய படைக்குழுவினர் நெருங்கி வருதல்.

*312—314* இசைக்கருவிகளின் முழக்கம்.

*314—315* தெரிவையரும் தெருவும் மலரப் பவனிவரல்.

*315—322* வருகைச் சின்னத்தின் ஒலி.

சகதத்து வாதந் தவங்காத்தோன் வந்தான்
மகதைத் திருநாடன் வந்தான் — நிகரில் 319

பெருத்த வுலகைப் பிரான்வந்தான் சேர்ந்தார்
வருத்தந் தவிர்த்த பிரான்வந்தா — னிருத்தத் 320

தினசமுக னந்தாலந் தீர்த்தமால் வந்தான்
வனச முகன்வந்தான் வந்தான் — எனமறுகிற் 321

சின்ன மொலித்த வொலியுஞ் சிறுகுறத்தி
முன்ன மொழிந்த மொழிபொலியுங் — கன்னத் 322

திழியு மமுத மிதுகொ லெனப்பொங்கி
வழியு முவகை வகைமல்க — முழுகிவருங் 323

காரோசை கேட்ட களிமயிலும் வெய்யவனுற்
றேரோசை கேட்ட திரண்மறையும் — நேராகக் 324

கொங்கையினுங் கச்சுக் குடிபோகக் கோகனகச்
செங்கை யினுஞ்சங் குதிர்நெரிய — வங்கமெலாம் 325

பூரித் தெழுந்து புலனுத் தரியமுடன்
வேரிக் குழல்சரிய வீதியிற்போ — யாரப்பொன் 326

மாடத்துங் காவணத்து மண்டபத்தும் வெண்டளரக்
கூடத்துஞ் சாளரத்துங் கோபுரத்து — மாடக 327

வீதி யகத்தும் விரைந்து சதகோடி
யோதிம மன்னு ருலாவந்து — மீதே 328

அவனி சுமந்தா னரதனங்கைக் கொண்டான்
பவனி வரும்பெருக்கைப் பாரீர் — தவழ்முகிலைச் 329

சேட்டாவு கோமானைச் செய்க்கிறைக்குஞ் சிற்றுளென்
றேட்டாது விட்ட துயர்பாரீர் — பாட்டளிகள் 330

கொங்குண் டுலவுமிவன் கோலக் குவளைத்தார்
நங்கண் கவரும் நலம்பாரீர் — தங்க 331

---

322—326 சின்னத்தின் ஒலி கேட்டு உவகையால் மகளிர் உள்ளம் பூரித்தல்.

326—328 மகளிர் செழியனின் உலாவைக் காண வீதியிலும் வீதியையடுத்த மண்டபம் முதலியவற்றிலும் உலா வருதல்.

328—335 'செழியன் பவனி பாரீர் !' என்னும் மாதர் உரை.

மிசையுருவம் பச்சைமா லாக்கி விலங்கும்
பசுமணிப்பொற் பூங்கடையம் பாரீர் — அசையிலெழு 332

பாரை யளிக்கவிவன் பாணியிரண் டோடிநியக்
காரொருமுன் ருன கவின்பாரீர் — மேருவரைக் 333

கப்புறஞ்சேர் தன்புகழ்போ லாடிப் புயத்திடுவெண்
செப்பருநல் லுத்தரியச் சீர்பாரீர் — மெய்ப்புயத்து 334

வீரக்கோ தைக்குயர்த்த மேடையென வீற்றிருக்கு
மாரக்கே யூர வணிபாரீர் — சேரக் 335

கனியிதழீர் பாரீர் கவினுருவம் பெற்ற
வினிய மதனிவனு மென்பார் — அனகனிவ 336

னெண்ணெண் கலைமுகத்து மீரெண் கலையுடைய
தண்ணன் மதிநிகரோ தானென்பார் — ஒண்ணுதலீர் 337

நாடத் தவஞ்செய்தா ஞமிவன்பாற் காமக்கூத்
தாடத் தவஞ்செய் திலமென்பார் — சூடுமதன் 338

தன்னீல மெய்திடுமுன் சாலவருள் செய்துனது
நண்ணீல நல்குவது நன்றென்பார் — அன்னீல 339

நிங்குயத்த கஞ்சத்தா லெய்த்தேன்முன் னீயுன்மா-
தங்கத்தை நீநிறுத்து சற்றென்பார் — பொங்குதிரை 340

யாயதனிக் கங்கைகுல ஞதலால் நின்போலத்
தாயிலை காணென்று சொல்லுவார் — நேயமொடு 341

மன்ஞ நிறங்கருகி மாலான வெங்களுக்குப்
பொன்ஞடை நல்கென்று போற்றுவார் — இன்ஞட் 342

கடக முடையாய் கனங்கை யகன்றுபொன்
கடக முதவென்று கலுழ்வார் — இடமிலங்கு 343

வங்க முடைய மயலாழி தாண்டவருள்
வங்க முதவென்று வழுத்துவார் — துங்கவெழி 344

லங்க முடையா யணைந்து தழுவுதற்கு
னங்க மதனை யருளென்பார் — தங்குபுகழ்க் 345

---

335—348 பவனி கண்ட மாதர் பலரும் செழியன் மேற்கொண்ட காதலால் பலபலவுரைத்து மயங்கித் தளர்தல்.

கல்யாண முள்ளாய்க் கணப்பொழுதி லெங்களைநீ
கல்யாணஞ் செய்கென்று காமிப்பார் — நல்யாணர் 346

பாலை யதிபா பரிவினொடு நீகாமப்
பாலை யருளென்று பகருவார் — மாலையெனுங் 347

கூற்றுவரி லாவி கொளுமென்று மின்னனையா
ராற்றரிய மால்கொண் டயர்போது — கோற்றொடியுஞ் 348

சென்றா டொழுதாள் செழிய னெதிர்குறுகி
நின்றா டுதிக ணிகழ்த்துவாள் — குன்றாத 349

வுன்பெயரு முன்குடையு முன்றிறலு முன்கவினு
முன்புகழும் கேட்டே னுனைக்கூடி — யின்புறுநா 350

ளென்றெய்து மென்றுள்ளத் தெண்ணி யிரவுகமாய்
நின்று தளர்ந்தே னெடிதாகி — நன்றிதையத் 351

துற்ற கடவு ளொளிரவெதிர் நின்றாங்கு
மற்றிக் கரக்கிரிமேல் வந்துற்றாய் — கொற்றவா 352

வுன்குடையி னீழலைக்கண் டோங்கு மெழிலிரதி
மன்குடையாற் பட்டதுயர் மாற்றினேன் — பொன்கொடுக்கு 353

மையாவுன் தந்தியைக்கண் டாடல்மதன் றந்திசெய்த
மெய்யார் துயரனைத்தும் வீழ்த்தினேன் — கையாழிற் 354

கூடுமிசை கேட்டுக் கொடுமையெலா மாதருனைப்
பாடுமிசை கேட்டுப் பரிவுற்றேன் — தேடருநீ 355

தானெழிலி யன்றோ தணவா துனைக்கூட
நானொருமின் னாகவுநீ நாட்டுவாய் — மேனிகழு 356

மாலையென தின்னுயிரை வாங்காம லுன்குவளை
மாலைதனை யின்று வழங்குவாய் — ஆலைவிலாற் 357

கோட்டுக் கிரிச்சிலையன் றன்னைவென்ற கோவிடத்திற்
காட்டிக் கொடாதனைந்து காத்தருள்வாய் — வேட்ட 358

மனங்குளிர வென்னைநீ வாவென்றாற் போது
மனங்களெனை யென்செய்வா னஞ்சேன் — தினந்தினமும் 359

---

348—373 அதிரூபவல்லி அவன் எதிர்சென்று தொழுது துதித்து வேண்டுதல்.

வெம்பியிரை கிட்டாது மேருவரை சூழவரு
மம்புலியின் வாதையங் ககற்றுவாய் — தம்பமுற 360

நின்று விரக நெருப்பைமுட் டிச்சுடுமத்
தென்றல் குளிரவருள் செய்குவா — யின்று 361

வெறுக்கப் படாததொரு வெங்குழலி னோசை
பொறுக்கச் செவிக்குப் புரிவாய் — கறுக்குநிறக் 362

கோகிலக்கா ளாம்பிரத்துக் கூப்பிட் டெழுந்தாலு
மாகுலமெய் தாம லருள்செய்வா — யோகயிலேன் 363

பாலி நலம்பொருந்தப் பாவையர்கள் முன்னெனக்குக்
கோல நறுமுரல் கொடுத்திடாய் — நீலி 364

பழிகமுவி நின்றகுலப் பார்த்திபனீ யின்றென்
பழியணுகா வாறிருகண் பாராய் — விழைவுதரு 365

முன்னருள்சற் றெய்தினு லோலிட்டு வைதிடுமென்
னன்னைதனை வாயி லடியேனே — பொன்னில் 366

... ... படியா திருந்த
விரவு வருத்துமோ வென்னைப் — பொருவிலா 367

மன்றயலூர் மேழி வளத்தாற் புவிகாக்கு
முன்றயலூர்க் கெல்லையிலே யோதுங்கால் — நன்ரு 368

யுனைப்பெற்ற பின்புவனி யோங்குகொடுஞ் செவ்வாய்
தனைப்பெற்ற துன்பந் தவிர்ந்தாள் — தனிப்புவியில் 369

மூவருணத் தார்கைக்கோல் மூன்று நிலைநிறுத்துந்
தாவிலுயர் கோலுன்கோல் தானன்றே — பாவுரைக்கு 370

முன்குலத்துக்குக் காதியன்றே வொண்கங்கை தன்னையரன்
மின்குலவு சென்னி மிசைவைத்தான் — மன்கலைசேர் 371

ரேழெ மூவரொருப்பெற் றீண்டு சிறந்தாங்கு
வழியரும் பன்னூல் வளம்பெற்ருய் — பாழியுடைக் 372

கோதி லறமு மொழுக்கமுங் கோடாத
நீதியுமுன் பாலே நிலைத்ததே — யாதலான் 373

---

*373—374* செழியன் விழிவைத்து அருள் செய்தல்.

மிக்க செழியன் விழிவைத் தருள்செய்தான்
கைக்களிறும் வீதி கடந்ததால் — மைக்குழலாள் 374

தன்மனையிற் புக்குத் தளர்வகல் வென்றெண்ணு
நன்மணிப்பொற் கூடத்தி னண்ணுங்கா — லென்மனத்தி 375

லெண்ணமுரை யென்ன விகுளை தனையனுப்பி
நண்ணியிருந் தாள்வருதல் நாடியே — வுண்ணயந்த 376

பாங்கி யினிதேகிப் பார்த்திபனைக் கைகூப்பி
யாங்குமொழி கின்றா ளரசேகேள் — வாங்குமிடை 377

யெங்கொடிநிற் பாடு மெழில்விறலி தஞ்சமெனத்
தங்குமயல் கொண்டு தளர்காலைத் — துங்கமுடை 378

யுன்பவனி கண்டா ளுனதருள்பெற் றாளினினீ
மன்புதிய தாரளித்து மன்னனே — அன்பொடுபின் 379

வாவென்று சொல்ல மருங்குவளைத் தாரளித்துப்
போவென் றனுப்புதலும் பூங்கொடிதன் — வாவென்ற 380

செங்கைதனில் வைப்பத் திகழவ் வலங்கறனை
யெங்கணவ னாகு மிதுவென்று — கொங்கைமிசை 381

யொற்றினாள் முத்த முதவினாள் கூந்தலிடைச்
சுற்றினாள் வைத்துத் துதித்துப்போய் — நற்றலைவன் 382

வந்தா னவனென்று வழிநோக்கி நிற்பளவி
லந்தாலந் தீத்தவருட் செழியன் — சந்தாபந் 383

---

374 களிறு அந்த வீதியைக் கடந்து செல்லுதல்.

374—376 அதிரூபவல்லி தன் மாடத்துள்ள கூடத்தை அணுகி, தன் கருத்தைச் செழியனுக்கு உரைக்குமாறு தோழியைத் தூது அனுப்பி, அவள் வரவை எதிர்பார்த்திருத்தல்.

376—380 தூது சென்ற பாங்கி அரசனிடம் சென்று வணங்கிச் சொன்ன செய்தி.

380 மன்னன் குவளை மாலையைத் தோழியிடம் தருதல்.

380—381 மன்னன் அளித்த மாலையைப் பாங்கி மங்கையிடம் சேர்ப்பித்தல்.

381—383 மன்னனின் மாலை பெற்ற அதிரூபவல்லியின் நிலை.

தீர வரல்கண்டு சிறந்துகளித் துத்தொழுது
வார முடனழைத்து வந்தருளிச் — சீரா 384

ருருத்திமணி மஞ்சத் தகமே களிப்ப
விருத்தியபின் ருனு மிருந்தாள் — பரித்தநறும் 385

பாக்குஞ் சுருளும் பரிவி னிருவோரு
மூக்கமொடு கொண்டா ருளமீது — தாக்குமத 386

ஞேயா னதுதவிர நோக்கியொரு வர்க்கொருவ
ரோயா ... சுருள்கொடுப்ப வாங்கினர் — சேயார் 387

கரங்கொண்டு நல்லாலிங் கனவிதங்க ளெல்லாந்
திரங்கொள் மனமுருகச் செய்தார் — வரும்பெரிய 388

நண்பினெடு செய்யவிதழ் நல்லமுத முண்டு
பண்புறவே சிற்காரம் பண்ணினர் — வண்புவியின் 389

எந்தக் குறியினு மீதின்பக் குறியென்றே
தந்தக் குறியாற் றருக்கினர் — சந்ததமு 390

முச்சிதப்பொற் ரேளி னுயர்கொங்கை யின்னகத்தால்
வைச்ச குறிகள் வயங்கினர் — வச்சமுட 391

னட்பாட்சி நீசம் பகையன்றி யேதினமு
மொத்தவராய்க் கூடி யுவப்புற்ருர் — மெத்த 392

வுளத்தை யுருக்கு முபரி யுபரி
திளைத்த சுரதவிதஞ் செய்தார் — வளத்தொடுபே 393

ரானந்த மெய்தின ரந்தக் கரணமைந்
தானந்த ராய்ச்சிறப்பு மோங்கினர் — மேனைந்து 394

மிவ்வகைசெய் தாழின ளிவ்வுலகை யாண்டுபல
செல்வமொடு வாழ்ந்தார் திகழ்ந்து. 395

---

383—384 அந்தாலந்தீர்த்த செழியன் அதிரூபவல்லியின் மாளிகைக்கு வருதல்.

384—385 செழியனைத் தொழுது வரவேற்று, மஞ்சத்து இருத்தி அதிரூபவல்லி தானும் உடனிருத்தல்.

385—395 இருவரும் இன்பம் துய்த்து மகிழ்ந்து வாழ்தல்.

## சிறப்புப்பெயர் முதலியவற்றின் அகராதி


அகத்தியன் 176
அகம்புறம் 35
அகரம் 189
அகவுமயில் 138
அகில் 114
அணு 67
அத்தனரீசர் 294
அத்தனரீசனர் 182
அத்தி 20
அதிருபவல்லி 82, 115, 135
அந்தக்கரணமைந்து 394
அந்தாலந்தீர்த்த செழியன் (காப்பு)
அந்தாலந்தீர்த்த மால் 321
அந்தாலந்தீர்த்தவருட் செழியன் 383
அந்தாலந்தீர்த்தான் 214-219, 280
அம்படி 68
அம்பரம் 54
அம்புலி 360
அமுதகுணன் 180
அமுதம் 4
அமுதவசனன் 175
அயன் 74, 78
அயில் 31, 120
அயில்கண்ணுள் 120
அர்த்தனரீசனர் 157
அரக்கன் 13
அரம் 31
அரம்பை 71
அரம்பைக் குருத்து 248
அரவணையான் 109
அரவிந்தப்பூ 15
அரவிந்தப் பூங்கோயில் தேவி 15
அரவு 67
அரி 68
அருந்தவத்தோர் 17
அருவி 138
அல்குலாள் 70
அலங்கல் 63
அலங்காரக்கொடி 84
அலவன் 72
அளிகள் 330
அறமும் ஒழுக்கமும் 373
அறுகாற்புள் 99-100
அன்றில் 239, 262
அன்னம் 146, 307
அனகன் 336
அனங்கன் 293, 359
ஆட்சி 392
ஆடல் 138
ஆணை 157
ஆதவனர் 106
ஆம்பிரம் 363
ஆராமம் 19
ஆலம் 4
ஆலவட்டம் 250, 255
ஆலிங்கன விதங்கள் 388
ஆலைவில் 357
ஆறுகால் வண்டு 6
ஆனந்தம் 394
ஆனந்தர் 394
இகுளை 106, 267, 376
இசை 216
இசையால் பொருப்பை உருக்குதல் 129
இடையாள் 69

இதழ்நல்லமுதம் 389
இதழினுள் 41
இதயத்துற்ற கடவுள் 351-352
இந்திரன் 134
இந்திரனூர் பொன்னகரம் 221
இந்திராணி 75
இந்துக்காந்தவமுதக் கதிர் மேடை 247
இயல் 216
இரண்டுமாகதிர் 142-143
இரதி 27, 82, 101, 353
இரதிபதி 27
இரதிமன் 353
இரவு 367
இராவணன் 25
இருணீக்கின பெருமாள் 179
இருணீக்குஞ் செழியன் குலம்166
இழை 66
இளைஞர் 20, 44
இளைஞோர் 70
இன்பரசவாணி 113
இன்னிசை 126
உகிர் 77
உடுக்குலம் 90
உண்ணமுது 108
உத்தரியம் 326, 334
உதரபந்தனம் 289-290
உதையமால்வரை 272
உதையன் 131
உந்திச்சுழி 66
உபரியுபரி 293
உமிழ்கலம் 101
உமை 182
உரகமணி 204
உருட்டு 124
உருத்திரன் 240
உருப்பசி 102
உருவிலி 68
உரோமவழியாள் 64
உலகம் (உலகத்தார்) 2
உலகுடையான் 181
உலகை 149, 151, 320
உலகைப்பிரான் 320
உவட்டாத செந்தேன் 5
உள்ளக்கமலம் 17
எண்ணெண்கலை 337
எழில்விறலி 378
எழிலி-மின் 356
எழுகலிங்கம் 210
எழுத்தும் பொருளும் 2
ஏழெழுவர் 372
ஐங்கருவி 138
ஐயை 85
ஓதிமம் 129, 328
ஓவியப்படம் 120
ஓவியம் 127
கங்கை 218, 303, 341, 371
கங்கைகுலன் 341
கங்கைத்தரை 303
கஞ்சன் 253
கடகம் 47, 343
கடவுட் புண்டர வெண்ணீறு 292
கடவுளர் 69
கண்டசரம் 45
கண்ணுடி 39, 93
கண்ணுள் 37
கண்ணுதலோன் 111
கண்ணேறு 118
கணவன் 381
கணிகையர் 186
கணைக்காலினுள் 73
கத்தூரி 85
கதிர் 143
கதிர்ப்பரி 153
கபோலத்தாள் 39
கமடம் 76
கமலத்தெய்வம 114
கமலம் 17, 78
கமுகு 45
கயம் 144
கரக்கிரி 352
கரடம் 154
கரி 191
கரிமாக்கடல் 310
கரியவண்ணன் 43
கருங்குவளை 89

கருந்தேன் 62
கரும்புவில் 70, 71
கருப்பூரவிமசலம் 83—84
கரும்பு 16
கல்யாணம் 346
கல்லாரம் 219
கல்லைக்குறிச்சி 144
கல்லைவடம் 314
கலாபமயில் 114
கலி 159, 164
கலிங்கத்துப்பரணி 210
கலிங்கம் 210
கலை 371
கவசம் 170
கவரி 102, 146, 198, 307
கவிக்குமுதவுபிரான் 317
கவிகை 198, 306
கவிஞர் 190, 309
கவிஞர் வாழ்த்து 309
கவிஞன் 204
கழல் 291
கழுத்தினுள் 45
கழை 46, 110
கழையிசை 110
களபக்காடு 140
களபம் 64
களிறு 301, 374
களிறுகள் 139
கற்கடகம் 47
கற்பகப் பூங்கொம்பு 6
கற்புரம் 56
கற்புரவாசம் 41
கன்னுடகம் 303
கன்னிகங்கை 212
கன்னிகாரம் 51
கனகச்சேலை 191
காணி 190
காதினுள் 38
காந்தள் 11
காந்திருவதத்தையார் 130
காமப்பால் 347
காமன் 147
காயிரும்பு தோய்ந்த பனிநீர் 252
காலாட்கடல் 310
காவணம் 327
காள் (காளம்) 363
காறை 229
கிண்கிணி 229
கிரிச்சிலையன் 358
கிள்ளை 13
கிளைதாங்கல் 165
கின்னரம் 126
கீதச்சுவை 112
சீதம் 108
குகிரம் 304
குங்குமத்தின் சேறு 86
குங்குமம் 91
குடகடல் 92
குதியாள் 75
குபேரன் 134, 193
குமரன் 30, 180
குமாரன் 166
குமிழ் 35
குயில் 10, 239, 262
குரா 25
குரிசில் 193
குலிகச்சேறு 83
குவளை 29, 89
குவளைத்தார் 331, 380
குவளைமாலை 152, 357
குழலாள் 25
குழலினேசை 362
குழை 38
குழைத்தரளக்காது 38
குளம் 186
குறத்தி 275
குறத்திமொழியொலி 322
குறமான் 30
குறுமுனி 192
குறுமுனி அயின்ற கடல் 192
கூடம் 327, 375
கூற்று 31
கேசரம் 125
கேயூரவணி 335
கைக்களிறு 374
கைக்கோல் மூன்று 370

கைம்மா 295
கையாள் 48
கொங்கம் 304
கொங்கை 60
கொடி 67, 75, 198
கொடுஞ்செவ்வாய் 369
கொம்பு 67
கொல்லிக்கிரி 137
கோகிலக்காள் 363
கோகிலம் 19
கோடி 33
கோபுரம் 385, 127
கோமான் 144, 180
கோய்முகடு 136
கோல் 370
சக்கரத்தின்புள் 51
சக்கிரவாளம் 32
சகோரம் 38
சங்கநிதி 223
சங்கரன் 184
சங்கு 45
சங்குவளை 152
சசி 14
சதகோடி 33, 103
சந்ததி 188
சந்தாபம் 383
சந்து 55, 293
சந்துகலவை 293
சமயத்துளக்கு 17-18
சயந்தன் 175
சரவணம் 29
சாயல் 79
சாளரம் 327
சிங்கம் 138
சித்ரவடிவம் 5
சிலம்பு 229
சிவனேயன் 215
சிவாகமம் 141
சிவிறி 85
சிற்காரம்பண்ணினர் 389
சிற்றுஞ்செழியன் 161
சிறுதிங்கள் 8
சிறுதென்றல் 11
சிறுநுண்ணிடையாள் 66
சிறுமின்னல் 19
சின்னமொத்த ஒலி 322
சுரதவிதம் 393
சுரிமுகம் 88
சுருதி 67
சுரும்பு 69, 89
சுருள் 386
சூரப்பவாணன் 171
செக்கர் 232
செங்கமலப்பூவை 100
செந்தமிழ் 188
செந்தாமரை 90
செந்தேன் 5, 121
செந்நெல் 143
செம்பொற்குழாம் 187
செம்பொன் 5
செல்வமொடு வாழ்ந்தார் 395
செவ்வந்தி 90
செவ்வந்திமாலை 8
செவ்வாய் 369
செழியன் 318, 349, 374, 383
சே 79
சேரன்மலையம் 139
சேலம் 128, 147, 148
ஞான விளக்கு 18
தடங்கண்ணுள் 37
தடாரி 314
தண்டு 198
தந்தக்குறி 390
தந்தி 198, 354
தமிழ் 169, 175, 191, 199
தமிழ்மாலைச்செழியன் 158
தமிழறியு மூதறிஞன் 316
தமையர் 173
தரளசோதி 137
தரளம் 38
தரளவட்டம் 220
தருவு 128
தவங்காத்தோன் 319
தவத்தோர் 17
தவம் 57
தவர் 37

தவழல் 12
தளவரும்பு 42
தளிரமளி 244
தனஞ்செயன் 180
தனத்தினுள் 59
தனம் 64
தாகந்தீர்த்தான் 177
தாரணி 22
தாரை 313
தாளாள் 78
திகிரி 2
திகிரிப்பொன்னுர்வரை 271
திகிரிவரை 149
திமிங்கிலம் 263
திமிலம் 313
தியாகப்பிரமன் செழியன் 159
திரிசூலி 239
திரு 23, 48, 82,
திருக்குளம் 104, 130 186
திருபுரை 86
திருமகளிர் 97
திருமணவன் 65
திருமுகம் 188
திருவேங்கடவன் 162, 178
திலதம் 80
தீபம் 186
தீராவினைதீர்த்த செல்வன் 176
துகிர் 77
துகிரும் வயிரமும் 77
துடி 54, 67
துதிகள் 349
துயரந்தீர்த்தான் 171
துலை 74
துளபப்புயத்தான் 181
துளப மார்பினுன் 1
தெய்வரம்பையர் 81
தென்மலையம் 11
தென்றல் 11, 72, 237, 257, 361
தென்னுடர் 303
தென்னுலகைச் சங்கரன் 184
தேர் 185
தேவாரம் 15
தேவேந்திரன் தாகம் தீர்த்தான் 172
தேன் 62, 68, 140
தைவரல் 124
தொடையாள் 71
தொழில் முனிவர் 18
தோகை 94, 135
தோளாள் 46
நகத்தால் வைச்ச குறிகள் 391
நட்பாட்சி நீசம்பகை 392
நட்பு 392
நடை 79
நந்தாவனம் 186
நபாயன் 175
நரம்பு 121, 140
நரலோகந் தேவேந்திரன் தாகந்தீர்த்தான் 172
நல்லோன் 197
நறவம் 21
நறுந்துகில் 99
நாகம் 7
நாகமீனுத மாணிக்கம் 7
நாகாபரணன் 30
நாகாபரணனது பின்குமரன் 30
நாகு 143
நாசி 40
நால்வேத நாயகன் 184
நாவலர் 163
நானம் 114, 140
நானவகில் 114, 281
நிருபர் 311
நிரையினம் 110
நிவாவாறு 141
நீசம் 392
நீதி 373
நீலத்தார் 288
நீலம் 63, 339
நீலமலர்ப்பூந்தாமன் 177
நீலி 203, 364
நீலிபழிகழுவி நின்றகுலம் 364-365
நுண்ணிடையாள் 69
நுதலாள் 26
நெடியமால் 260

பகலோன் 92
பகை 392
பங்கயம் 48
பச்சைமணி 105
பச்சைவரை 140
பசுங்கிள்ளை 13
பட்டமரம் 110
படங்கட்டும் பொன்னறை 282
படைமன்னர் 197
பண்பன் 200
பணிமணி 92
பனை 314
பத்தல் 123
பதம் 122
பதலை 314
பதினெட்டு மண்டலம் 224
பந்து 75
பரட்டினுள் 74
பரமன் 205
பரி 153, 191, 198
பரிசில் 193
பரிமாக்கடல் 310
பருவமடந்தை 128
பல்கலை 108, 164
பவளம் 21, 41
பவனி 278, 315, 329, 379
பவனி வரல் 315
பவனி வரும் பெருக்கு 329
பழசை நகர் 202
பளிங்கு 87
பற்பமாநிதி 223
பற்பராக பீடம் 105
பன்னூல் வளம் 372
பா 370
பாக்குஞ் சுருளும் 386
பாங்கி 377
பாடுமிசை 355
பாணன் 209
பாணி 75
பாய்புலி 155
பார்ஏழ் 19
பார்த்திபன் 377
பார்மன்னர் மூவர் 162-163
பாரிப் பொருப்பு 138
பாலை (ஊர்) 145-146
பாலையதிபன் 347
பாவோர் 214
பாற்கடல் 70, 88
பாற்கடலில் வாய்ந்தெழு
மாதர் 88
பிரபுராயன் 162
பிரான் 171
பிறை 26
புகையும் விளக்கும் 281
புட்பகவூர்திப் பெருமான்
நன்னகரம் 221
புண்டரிகன் 84
புண்டரிகன் நாவில் அலங்
காரக்கொடி 84
புண்டரீகம் 50
புருவத்தாள் 27
புலவர் 315
புலிக்கொடி 155
புலி, மீன், வில் 155
புவனி 369
புற்பிடிக்க வாள் பிடித்த
பேராளன் 196
புறந்தாளாள் 76
பூகம் 145
பூங்கடையம் 332
பூசை 151
பூதலம் ஏழ் 151
பூந்திரு 130
பூமான் 177
பூலோகநாதன் 167
பெண்ணேறு பாகர் 118
பெம்மான் 212, 213
பெம்மான் சடை மகுடக்
கோதை 213
பெரியநாயகி 183, 294
பெரிவளோர் பாகத்துற்ற
பிரான் 150
பெருநூற் கவிஞர் 190
பெரும்பத்து 144
பெருமை 132
பெருவாழ்வு 188

பேரமலை 139
பேரன் 162
பேரி 313
பைங்கிள்ளை 13
பொய்யாமொழியான் 199
பொற்பணி 53
பொன்பரப்பினர் 157
பொன் பரப்பு நாதர் 183-184
பொன்னகரத்தந்தமணி 221-222
பொன்னகரம் 221
பொன்னவிருஞ் சேலை 228-229
பொன்னுடை 342
பொன்னுருக்கு நீர். 91
பொன்னேலை 229
போராளன் 196
மகதைத் திருநாடன் 319
மகதை நாடு 143
மகரக்குழை 286
மகரம் 47
மகரம் மிதுனம் கற்கடகம் 47
மஞ்சம் 385
மஞ்சரி (காப்பு)
மஞ்சனமாடுதல் 283
மண்டபம் 185, 327
மணி 222
மணிமுத்தாறு 142
மதன் 76, 117, 256, 336 338, 354
மதன் தேவி 80
மதன் நோய் 386
மதன் வாழ்வு 10
மதன ரசத்தேன் 114
மதனன் 79, 174
மதி 44, 137
மதியம் 7
மதிள் 185
மதுரையரசு 209
மயன் 93
மயில் 28, 114, 135, 138, 324
மயிலாடல் 138
மயூரம் 9
மரபுநிலையிட்டோன் 202
மருகன் 167
மருப்பு 123
மரை 324
மலர்க்கா 233
மலர்ப்பாய் 248
மலர்ப்பொன் 73, 74
மலர்மகள் 83
மலையம் 139
மவுலி 285
மழுவுவந்தார் 4
மறுகு 185
மறைவாணர் 189
மன்னர் மூவர் 162-163
மா 28
மாகத்தரு 159
மாடம் 327
மாணிக்கம் 7, 228
மாணிக்கமாலை 190-191
மாதங்கம் 301, 340
மாதவம் 133
மாதேவர் 55
மாதுபங்கன் 116
மாபுரம் 185
மாமேரு 52
மாமேவு தண்டுளப மார்பினன் 1
மார்பிலாரம் 225
மால் 61, 134
மாலை தோன்றுதல் 234
மாலையே புகழும் மஞ்சரி (காப்பு)
மாழை மழை 159
மாறன் 205
மான் 7, 14, 114
மிடற்று (ப்பாடல்) 121, 125
மிதுனம் 47
மிதுன மீனம் 47
மின் 67
மின்னல் 19
மீன் 28
மீன்கொடி 155
முகத்தாள் 44
முத்தமாளிகை 234, 235
முத்தமிழ் 164
முத்தர் 20
முத்து 42, 45, 123

முத்துத்தொடையல் 249
முத்துவடம் 135, 274
முதல்வர் 168
முது தமிழ் 175
முந்தயர் 160
மும்முரசு 156
முரசு 156, 313
முருந்து 42
முல்லை 22, 40
முழம்பாதத்தாள் 72
முழாம் 314
முளரி 44
முளரித் திருமுகத்தாள் 44
முறுவல் 42
முன்கையினுள் 47
முன்றில் 156
முன்னீர்த் திரைத் துண்டோன் 109
முனிவர் 18, 66
மூதறிஞன் 316
மூவருணத்தார் 370
மூவேந்தர் 208
மெய்க்கும் பெருமாள் 169
மேகலை 228, 229
மேரு 52
மேருவரை 333, 360
மேழி 202
மேழிக்கொடி 155, 308
மேழிவளம் 368
மேனகை 102
மைத்துனன் 181
மொந்தை 314
யாழ் 130, 131, 137, 314, 354
யாழ் முதலாம் ஐங்கருவி 138
யானை 304
யானை எட்டு 131
யானைமுகன் (காப்பு)
ரம்பையர் 81
வங்கம், 304, 344
வச்சிரப்பூண் 58
வசந்தன் 238
வடகிரி 202
வடபத்திரம் 65
வடம் 53
வடமரம் 165
வண்டு 6, 35, 154, 233
வயிரம் 77
வயிற்ருள் 65
வரதெய்வம் 81
வரராமன் 181
வரால் 73
வருத்தந் தீர்த்த பிரான் 320
வரையாத சித்ர வடிவம் 5
வல்லி 12
வல்லி (அதிரூபவல்லி) 98
வலம்புரி 3, 313
வலவன் 72
வழாமொழி 187
வழுதி 209
வழுதிகிரி 202
வள்ளல் ஒரு மூவெழுவர் 163
வள்ளலிருபத் திரண்டாம் சிற்ருஞ்செழியன் 161
வளை 89
வாசல் 198
வாடை 259
வாணி 113
வாய்மையான் 203
வார் 53
வாரணம் 154, 240
வாளிநயனம் 80
வாளுங் கவசமும் 170
வாளை 145
வானரம் 140
விச்சை 105, 107
விசைய குபேரன் 193
விண் 68
விண்ணேர் 74
விமானம் 187
விரகத்தி 255
விரகநெருப்பு 361
விரல் 77
வில் 196
வில்லின் கொடி 155
விழாவும் சிறப்பும் 87
விளக்கு 18

| | |
|---|---|
| விறலி | *113, 228, 378* |
| விறலோன் மகன் | *73* |
| வீணை | *124* |
| வீதி | *328* |
| வீரக்கோவை | *335* |
| வீரம் பிடித்தெறிந்தார் | *196* |
| வெண்ணீறு | *292* |
| வெண்மதி | *137* |
| வெள்ளாடை | *100* |
| வேதச்சுவை | *112* |
| வேதமொரு நான்கு | *199* |
| வேதன் | *166* |
| வேய்ங்குழல் | *261* |
| வேயீன்ற முத்தர் | *20* |
| வேரி | *96* |
| வேல் | *196* |
| வேழம் | *298* |
| வேள் | *14* |

## புராண - வரலாற்றுச் செய்திகள்


அகத்தியன் இசையால் மலையை உருகச்செய்தது 109

அகத்தியன் கடலை உண்டது 109

அர்த்தநாரீசுரரானது 118, 182, 213, 294

அரக்கன் (இராவணன்) விட்ட மான் (மாரீசன்) 13 - 14

அரன் தொட்ட மான் 14

உதையன் (உதயணன்) யானையை அடக்கியது 131

கங்கை குலத்தார் 213, 341

கண்ணன் வேய்ங்குழல் இசையால் பட்டமரம் தழையச் செய்தது 110

கண்ணுதலோன் செவியில் இசைக்குழை தரித்தது 111

கலிங்கப்பரணி கொண்டது 210

கவிஞனுக்கு உதவப் புற்றில் கைவிட்டு நாகமணி கொண்டது 204

கற்குப் பிணைகொடுத்துச் சிறைவீடு செய்தது 207

சிவன் யானைத்தோல் போர்த்தது 240

திருமணவன் வடபத்திரத்தில் வைகியது 65

திருமால் கடல் வற்றச் செய்தது 260

திருமால் (கண்ணன்) கோவர்த்தனகிரியை எடுத்தது 61

நஞ்சுண்ட பரமனுக்கு முளைவாரியிட்டது 205

நாகாபரணனது பின்குமரன் (முருகன்) 29 - 30

பரமன் நஞ்சு உண்டது 205

பழசை நகர் நீலி பழி துடைத்தது 203, 365

பாணற்கு மதுரை அரசு அளித்திது 209

பாற்கடல் கடைந்து அமுதம் எழச் செய்தது 1 - 4, 70

பூமியைத் திருமாலாகிய வராகமூர்த்தி கொம்பால் எடுத்து மார்பில் வைத்துக் காத்தது 211

மாவையும் மறிகடலையும் கடந்த வேல் 28

முதுதமிழை ஆராயும் தொன்னூற்கு அகத்தியன் 176, 192

மன்மதன் கருப்பு வில் 16, 27

வேயீன்ற முத்தர் பித்தர் வடிவமானது 20

மாறன் சோதிப்பச் சூன்முதுகில் அடிசில் தந்தது 206